Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, OCTOBER 9, 2023

திங்கட்கிழமை ஒக்டோபர் 09, 2023 | ஒளி: 09 கதிர் 101 | பக்கம்:07 | நகர பதிப்பு | FREE



இஸ்ரேல் – பலஸ்தீன மோதல்

## இலங்கை கவலை

**பணியாளர்கள் குறித்தும் அவதானம்; ஒருவர் காயம்**

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்தில் கடுமையான தாக்குதல்கள் மற்றும் வன்முறை அதிகரிப்பு மற்றும் அதனால் ஏற்படும் உயிரிழப்புகள் குறித்து இலங்கை ஆழ்ந்த கவலையடைவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

வன்முறைகளை உடனடியாக நிறுத்துமாறு இலங்கை அழைப்பு விடுப்பதாகவும், பொதுமக்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படாமல் இருக்க அனைத்து தரப்பினரும் அதிகபட்ச கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

டெல் அவிவ் மற்றும் ரமல்லாவில் உள்ள இலங்கைத் தூதரகங்கள் சம்பவத்தை உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், மோதலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள இலங்கையர்களுடன் தொடர்ந்து ஒருங்கிணைந்து வருவதாகவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# பிக்குவுக்கு அடங்கியோர் எங்களை அடக்குகின்றனர்

**பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் குற்றச்சாட்டு**



■ வா.கிருஸ்ணா

பொலிஸாரின் தொப்பியை, ஸ்டாரை கழட்டி கேடுகெட்ட வார்த்தைகளினால் பௌத்த பிக்கு திட்டும்போது அமைதியாக பார்த்துக்கொண்டிருந்த பொலிஸார், அமைதியான முறையில் போராட வந்த எங்களை அடக்குவதற்கு முற்படுவதானது இந்த நாட்டில் சிங்களவர்களுக்கு ஒரு சட்டம் தமிழர்களுக்கு ஒரு சட்டம் என்பதை வெளிப்படுத்துகின்றதாக மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2





நாகப்பட்டினம்– காங்கேசன்துறை

## 'செரியாபாணி' பயணிகள் கப்பல் சேவை நாளை ஆரம்பம்



■ நிதர்ஷன் விநோத்

தமிழகம் நாகப்பட்டினம் காங்கேசன்துறையிடையிலான செரியாபாணி என்ற பெயரைக் கொண்ட பயணிகள் கப்பல் சேவை பத்தாம் திகதி ஆரம்பமாக உள்ளது. இந்நிலையில் பரிட்சார்த்த நடவடிக்கைகள், ஞாயிற்றுக்கிழமை (08) மேற்கொள்ளப்பட்டன.

அதன் பிரகாரம் இந்தியாவின் நாகப்பட்டினத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (08) காலை புறப்பட்ட செரியாபாணி எனும் குளிர் ஊட்டப்பட்ட கப்பல் மதியம் 1.15 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்தை வந்தடைந்திருந்தது இந்த கப்பலில் பணியாற்றும் 14 பணியாளர்கள் மட்டுமே இந்த பரிட்சார்த்த நடவடிக்கைகளின் போது வருகை தந்திருந்தனர்.

தொடர்ச்சி P2

அடுத்த 10 ஆண்டுகளில்

# கிழக்கு மிளிரும்

■ பேரின்பராஜா சபேஷ்

கிழக்கு மாகாணத்தை அடுத்த பத்து ஆண்டுகளில் முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பு - செங்கலடி மத்திய கல்லூரியின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் ஞாயிற்றுக்கிழமை (08) பிரதம அதிதியாகக் கலந்துகொண்டபோதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்

இந்தியாவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கமைவாக திருகோணமலை மாவட்டம் அபிவிருத்தி செய்யப்படும். அதேபோன்று மகாவெளி ஏ மற்றும் பி பிரிவின் கீழ் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அவர்



மேலும் கூறினார்.

ஜனாதிபதி இங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், முன்னாள் அமைச்சர் கேடபிள்யு. தேவநாயகம், ஜேஆர் ஜயவர்தன மற்றும் நானும் சமகாலத்தில் அமைச்சரவையில் இருந்தவர்கள். அக்காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தை மகாவெளி திட்டத்தின்கீழ் அபிவிருத்தி செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் போர் காரணமாக தடைப்பட்டது. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தை விரைவாக அபிவிருத்தி செய்வதற்கு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




## சீரற்ற வானிலையால் 64,834 பேர் பாதிப்பு

**காலி, மாத்தறை மாவட்டங்கள் மூழ்கின**

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக 7 பேர் உயிரிழந்துள்ளதுடன் 23 பேர் காயமடைந்துள்ளதுடன் 17,993 குடும்பங்களைச் சேர்ந்த 64, 834 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம், ஞாயிற்றுக்கிழமை (08) தெரிவித்தது.

மாத்தறை மாவட்டத்தின் 14 பிரதேச செயலகப் பிரிவுகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள 6,301 குடும்பங்களைச் சேர்ந்த 23,108 பேர் மீட்கப்பட்டுள்ளதுடன், 11,692 குடும்பங்களைச் சேர்ந்த 41,726 பேர் இன்னும் சிக்கியிருப்பதாக தெரியவருகிறது.

தொடர்ச்சி P2

## "எப்போதும் எதிரானவன்"

இனிமேல் தனது புகைப்படத்தை கட்அவுட்கள் மற்றும் சுவரொட்டிகளில் காட்சிப்படுத்த வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, கோஷங்கள் மற்றும் கட்அவுட் அரசியலுக்கு தான் எப்போதும் எதிரானவன் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், அனைத்து சுவரொட்டிகளிலும் தனது புகைப்படத்தை காட்சிப்படுத்துவதை தவிர்க்குமாறு ஜனாதிபதி ஏனைய அரசியல் தலைவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசியல் கோசம் அன்றி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதே




இன்றைய தேவை என வலியுறுத்திய ஜனாதிபதி, கட்அவுட் மற்றும் அரசியல் கோசங்கள் இந்த நாட்டின் பொருளாதாரத்தை அதல பாதாளத்திற்கு இழுத்துச் சென்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

## இலங்கைக்கு தலைமைப் பதவி

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்கவுள்ள அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 11ஆம் திகதியன்று கொழும்பில் இலங்கை நடாத்தவுள்ள 23ஆவது இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் அமைச்சர்கள் மட்டத்திலான கூட்டத்திற்காக இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் வெளிவிவகார அமைச்சர்கள் மற்றும் அதன் உறுப்பு நாடுகளின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளனர்.

தொடர்ச்சி P2

உள்நாட்டு பிரச்சினைகளுக்கு

## சர்வதேசத்தை நாட அவசியம் இல்லை

உள்நாட்டு பிரச்சினைகளை நாட்டுக்குள்ளேயே தீர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, அதற்காக சர்வதேசத்தை நாட வேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்தார். வேறுபாடுகளை முன் நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவை சந்திக்க நேரிட்டதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதென சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2





கொழும்பு மாநகர எல்லையில்

## ஆபத்தான மரங்களை வெட்டி அகற்றும் பணி

**இ.போ.சவும் முக்கிய அறிவுறுத்தல்**

கொழும்பு மாநகர எல்லையில் 100 வருடங்களுக்கு மேலான பழமையான பாரிய மரங்களின் கிளைகள் வெட்டி அகற்றப்பட்டதுடன், மரங்களும் அடியோடு அறுக்கப்பட்டு, அகற்றப்பட்டன.

தொடர்ச்சி P2

காபூல்

## ஆப்கானில் நிலநடுக்கங்கள் 2,000 பேர் மரணம்

ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதிவாகி உள்ளது. இந்த நிலநடுக்கம் காரணமாக சுமார் 2,000 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் பலரும் காணாமல் போயுள்ளனர் என்று அந்நாட்டு தகவல் தெரிவிக்கின்றது.

ஆப்கானிஸ்தானின் மேற்குப் பகுதியில் உள்ள ஹெராத் நகரில் இருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பகுதியை மையமாகக் கொண்டு இந்த நிலநடுக்கம் சனிக்கிழமை (07) காலை 11 மணியளவில் ஏற்பட்டுள்ளது. முதல் நிலநடுக்கம் 5.5 ஆக பதிவான நிலையில், அடுத்தடுத்து 4.7, 6.3, 4.6 என நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலநடுக்கங்கள் காரணமாக பல்வேறு கட்டிடங்கள் இடிந்து விழுந்துள்ளன. பல கட்டிடங்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது.

ஹெராத் நகரிலும் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. இதனால், அதிர்ச்சி அடைந்த மக்கள், கட்டிடங்களில் இருந்து வெளியே வந்தனர். நிலநடுக்கங்கள் காரணமாக வீதிகளில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.



## காலி, மாத்தறையில் 2 நாட்களுக்கு பூட்டு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்து பாடசாலைகளையும் இன்றும் (09) நாளையும் (10) மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண ஆளுநர் கலாநிதி விலி கமகேவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தென் மாகாண கல்வி, காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின் செயலாளர் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு இதனைத் தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் வியாழக்கிழமை (05) முதல் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதுடன், கடுமையான வெள்ளம் காரணமாக இதனை நீடிக்க் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# பிக்குவுக்கு அடங்கியோர்...

மட்டக்களப்பு மயிலத்தமடு, மாதவனை பகுதியில் முன்னெடுக்கப்பட்டுவரும் சட்ட விரோத குடியேற்ற வாசிகளின் ஆக்கிரமிப்பினை தடுத்துநிறுத்துமாறு கோரி அப்பகுதியை சேர்ந்த கால்நடை பண்ணையாளர்கள் கடந்த 24 நாட்களாக போராடிவருகின்றனர்.

செங்கலடி மத்திய கல்லூரிக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வருகை தருவதை முன்னிட்டு செங்கலடி-கொம்மாதுறை பகுதியில் பாரிய கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று ஞாயிற்றுக்கிழமை (08) முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட பண்ணையாளர்கள், மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், சிவில் அமைப்புகள், பொது அமைப்புகள் இணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இதன்போது கொம்மாதுறை சித்திவிநாயகர் ஆலயத்திற்கு அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், அப்பகுதியில் பெருமளவான பொலிஸார் குவிக்கப்பட்டு வீதித்தடைகள் போடப்பட்டு நீர்பாய்ச்சும் இயந்திரம், கண்ணீப்புகை இயந்திரங்கள் கொண்ட வாகனங்கள் நிறுத்தப்பட்டது.

இந்த நிலையில், பொலிஸார் நீதிமன்ற தடையுத்தரவு உள்ளதாகவும் வீதியை மறித்து போராடிமுடியாது எனவும் கோரிய நிலையிலேயே போராட்டமானது கடுமையாக மாறி பொலிஸாரின் தடையினை மீறிசெல்ல முற்பட்ட நிலையில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே முறுகல் நிலையேற்பட்டது.

அதேநேரம் தடையினை உடைத்துச்செல்ல போராட்டக்காரர்கள் முற்பட்ட நிலையில், இருதரப்பினருக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கமும் ஏற்பட்டது.

போராட்டத்தின் போது தடையை உடைத்துச்செல்ல முற்பட்ட பொலிஸார் அவர்களை தடுத்த நிலையில் பெரும் களேபரம் ஏற்பட்டது.இதன்போது தடையினையுடைத்துச்செல்ல முற்பட்ட மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவினர் சங்க தலைவி மீது பொலிஸார் தாக்குதல் முயற்சிகளை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.கலையரசன், முன்னாள் எம்.பிக்களான ஞா.சிறிநேசன், பா.அரியநேத்திரன்,சீ.யோகேஸ்வரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி சுகாஸ், உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டதுடன் கால்நடை பண்ணையாளர்களும் சட்டத்தரணி சுகாஸ{டனும் வாய்கத்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இந்த போராட்டம் காரணமாக வாழைச்சேனை-மட்டக்களப்பு பிரதான வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டதன் காரணமாக மாற்று வழியூடாக போக்குவரத்துகள் மேற்கொள்ளப்பட்டன.

# இலங்கை...

இதுவரை இடம்பெற்ற மோதல்களில் இலங்கையர் ஒருவர் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்தை தொடர்பு கொண்டு இலங்கை பணியாளர்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிக்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்தார்.

இஸ்ரேலிலுள்ள இலங்கைப் பணியாளர்கள் தொடர்பில் இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகம் அவதானத்துடன் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இஸ்ரேலில் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு அவதானம் செலுத்தியுள்ளதாகவும் புலம்பெயர்ந்த பணியாளர்களை பாதுகாப்பதற்கு விரைவான நடவடிக்கை எடுப்பதற்கு தயாராகவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்திற்கும் இடையே பல ஆண்டுகளாக மோதல் நிலவி வரும் நிலையில், பலஸ்தீனின் ஹமாஸ் ஆயுத தாரிகள் இஸ்ரேல் மீது நடத்திய ஏவுகணை தாக்குதல்களை தொடர்ந்து இஸ்ரேல் பதில் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளதால், நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

காசாவில் வசித்து வரும் பாலஸ்தீன மக்கள் உடனடியாக வெளியேறும்படி இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், துப்பாக்கிகளை எடுத்துக்கொண்டு போருக்கு புறப்படுமாறு ஹமாஸ் கமாண்டர் முகமது அல்-தேப் பலஸ்தீன மக்களுக்குஅழைப்பு விடுத்துள்ளார்.

# 'செரியாபாணி' பயணிகள்...

கப்பல் சேவைக்கு பயன்படுத்தப்படும் கடல் பாதை, கடல் மற்றும் காலநிலை நிலவரம் சகல விடயங்களும் அவதானிக்கப்பட்டன.

பரீட்சார்த்த நடவடிக்கை வெற்றிகரமாக மேற்கொண்டமையை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.சுமார் அரை மணி நேரம் தரித்து நின்ற பின்னர் மதியம் 1.45 மணியளவில் மீண்டும் இக்கப்பல் நாகப்பட்டினம் நோக்கி புறப்பட்டது.

நாகப்பட்டினம் இலங்கையிலேயே பயணிக்க இருவழிக் கட்ணமாக 53,500 ரூபாயும், ஒருவழிக் கட்டணமீக 27,000ரூபாயும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் பயணிகள் தங்களுடன் 40 கிலோ கிராம் வரை உள்ள பொருட்களைக் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த கப்பல் சேவையின் மூலம் நாகப்பட்டினத்தில் இருந்து 3 மணி நேரத்தில் இலங்கை சென்றடைய முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மிளிரும்

குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் விவசாயம், கடல் தொழில் மற்றும் உல்லாசப்பணத்துறை ஆகிய அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. விவசாயத்துறையில் நவீனத்துவம் உட்புகுத்தப்படும்.

பண்ணையாளர்களும் தினமும் 10 தொடக்கம் 12 லீற்றர் பால் கறக்கும் கறவைப் பசுக்கள் வழங்கப்படும். அதேபோன்று இலட்சக்கணக்கான உல்லசப்பயணிகள் வரக்கூடிய பிரதேசமாக கிழக்கு மாகாணம் மாற்றப்படும்.

செங்கலடி மத்திய கல்லூரி பல துறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. இங்கு சிலவகையான நடனங்கள் அரங்கேற்றப்பட்டபோதிலும் மேற்கத்தேய நடனம் இருக்கவில்லை நான் அடுத்த முறை இங்கு வரும்போது மேற்கத்தேய நடனமும் அரங்கேற்றப்படவேண்டுமென எதிர்பார்க்கிறேன். இப்பாடசாலைக்கு நான் தொழில் நுட்ப கூடமொன்றை வழங்கவுள்ளேன்" என்றார்.

பாடசாலை அதிபர் தே.குகதாசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ,இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மற்றும் துறைசார் அதிகாரிகள் பலரும் பங்கேற்றனர்.

# சர்வதேசத்தை...

**தேசிய கீதத்தில் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று கூறப்படுவதால் அதனை சிங்களத்தில் இசைத்தாலும் தமிழில் இசைத்தாலும் பிரச்சினைகள் இல்லை**

இன மற்றும் மதப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணாமல் ஒரு நாடு என்ற வகையில் முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதால், விரைவில் அதற்குரிய தீர்வுகளை காண்பதற்காக அனைத்து தலைவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் 150 ஆவது ஆண்டு பூர்த்தி விழா நிகழ்வில் சனிக்கிழமை (07) கலந்துகொண்டிருந்த போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய கீதத்தில் அனைவரும் ஒரு தாய் பிள்ளைகள் என்று கூறப்படுவதால் அதனை சிங்களத்தில் இசைத்தாலும் தமிழில் இசைத்தாலும் பிரச்சினைகள் இல்லை எனவும், அனைவரும் ஒன்றுபட்டு ஒரே தேசமாக முன்னோக்கிச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

வேறுபாடுகளை முன் நிறுத்தி மோதல்களை ஏற்படுத்திக் கொண்டதால் நாடு என்ற வகையில் இலங்கை சரிவைச் சந்திக்க நேரிட்டதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அரசியல் ரீதியான வேறுபாடுகளும் இலங்கையை நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதென என்றும் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் பொருளாதாரம் முழுமையாக சரிவடைந்ததால் கடந்த வருடத்தில் நாட்டு மக்கள் முகம்கொடுத்த நெருக்கடிகளை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அனைத்து வேறுபாடுகளையும் விடுத்து நாட்டுக்காக அனைவரும் ஒன்றுபட்டு பயணிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான எஸ்.வியாழேந்திரன், சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருடன் மட்டக்களப்பு சென்.மைக்கல் கல்லூரியின் அதிபர் எண்டன் பெனடிக் உட்பட பாடசாலையின் ஆசிரியர் குழாம், மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

## ஆபத்தான...

கொழும்பு நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வீதியின் இருமருங்குகளிலும் ஆபத்தான நிலையில் இருக்கும் மரங்களை அகற்றுமாறு விடுக்கப்பட்ட பணிப்புக்கு அமையவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, டிப்போ மற்றும் பஸ் தரிப்பிடங்களுக்கு அருகில் ஆபத்து ஏற்படும் வகையிலுள்ள மரங்களை அகற்றுமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.

வெள்ளம் சூழ்ந்துள்ள பகுதிகளில் பொலிஸார் மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவினரின் அறிவுறுத்தல்களை மீறி, பஸ் போக்குவரத்தில் ஈடுபட வேண்டாம் எனவும் அனைத்து டிப்போகளுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக சபை குறிப்பிட்டது. கொள்ளுப்பிட்டி, டுப்ளிகேஷன் வீதியில், பஸ் தரிப்பிடத்தில் ஒருசில வினாடிகள் மட்டுமே நிறுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் மீது, பாரிய மரம் விழுந்ததில், ஐவர் பலியானதுடன் காயமடைந்த ஐவரும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அந்த பஸ் இரண்டாக முறிந்தது. இதனால், அப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. பல மணிநேரத்துக்குப் பின்னர், அந்த பாரிய மரணம் துண்டு துண்டாக வெட்டி அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சீரற்ற வானிலையால்...

காலி மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், வெள்ளம் காரணமாக 2,900 குடும்பங்களைச் சேர்ந்த 6,940 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்போது பெய்து வரும் மழையினால் 199 வீடுகள் சேதமடைந்துள்ளதுடன், மூன்று வீடுகள் முற்றாக சேதமடைந்துள்ளன.

எதிர்வரும் 48 மணித்தியாலங்களில் மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் மழையுடனான வானிலை தற்காலிகமாக குறையும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, சனிக்கிழமை (07) தரவுகளின் படி, இரத்தினபுரி மாவட்டத்தின் 17 பிரதேச செயலகப் பிரிவுகளில் 273 குடும்பங்களைச் சேர்ந்த 1,041 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கேகாலை மாவட்டத்தின் மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் 278 குடும்பங்களைச் சேர்ந்த 1,058 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தின் மூன்று உள்ளூராட்சிச் செயலகப் பிரிவுகளில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 293 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 5 பேர் உயிரிழந்துள்ளதுடன், 17 பேர் காயமடைந்துள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தின் 13 பிரதேச செயலகப் பிரிவுகளில் 865 குடும்பங்களில் 3,203 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கம்பஹா மாவட்டத்தில் 12 பிரதேச செயலகப் பிரிவுகளில் 134 குடும்பங்களில் 593 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியா மாவட்டத்தில் ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 25 பேரும், புத்தளம் மாவட்டத்தின் இரண்டு பிரிவுகளில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 193 பேரும், குருநாகல் மாவட்டத்தில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 204 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். 724 வீடுகளும் கடுமையாக சேதமடைந்துள்ளன.

# இலங்கைக்கு...

**2023 முதல் 2025 வரையான காலப்பகுதிக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கவுள்ளது.**

அவுஸ்திரேலிய உதவி வெளியுறவு அமைச்சர் டிம் வொட்ஸ், பங்களாதேஷ் வெளியுறவு அமைச்சர் கலாநிதி ஏ.கே.அப்துல் மொமன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெய்சங்கர் உள்ளிட்ட பல நாடுகளின் பிரதிநிதிகள் கொழும்பில் நடைபெறும் அமைச்சர்கள் குழு கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஜப்பான் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் மசாஹிரோ கொமுரா, கொரியா வெளியுறவு அமைச்சின் அரசியல் விவகாரங்கள் துணை அமைச்சர் சுங் பியுங்-வோன், ஐக்கிய இராச்சியத்தின் இந்தோ-பசிபிக் அமைச்சர் அன்னே மேரி ட்ரெவெலியன், ஆகியோரும் இந்த கூட்டத்தில் இணையவுள்ளனர்.

அமைச்சர்கள் குழு என்பது இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் மிக உயர்ந்த அமைப்பாகும். தற்போதைய தலைவரான பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சரிடம் தலைமைப் பதவியை வழங்கும்போது, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி சபைக்கு தலைமை தாங்குவார்.

இந்தக் கூட்டத்திற்கு முன்னதாக, வெளியுறவு செயலாளர் அருணி விஜேவர்தன தலைமையில் இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் 25ஆவது கூட்டம் (ஒக்டோபர் 9 முதல்10வரை) நடைபெறும்.

23ஆவது அமைச்சர்கள் கூட்டத்தில் 2023 முதல் 2025 வரையான காலப்பகுதிக்கான இந்து சமுத்திர எல்லை நாடுகள் சங்கத்தின் தலைமைப் பதவியை இலங்கை ஏற்கவுள்ளது.

வர்த்தகம் மற்றும் முதலீடு, கடல்சார் காவல் மற்றும் பாதுகாப்பு, மீன்பிடி முகாமைத்துவம், இடர் முகாமைத்துவம் மற்றும் பசுமைப் பொருளாதாரம் உள்ளிட்ட விடயங்களில், சங்கத்தால் அடையாளம் காணப்பட்ட ஆறு முன்னுரிமைப் பகுதிகளில் ஒத்துழைப்பதற்கான வழிகள் குறித்து அமைச்சர்கள் ஆலோசிக்கவுள்ளனர்.

இந்து சமுத்திர எல்லை நாடுகளின் சங்கத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி சல்மான் அல் ஃபரிசி மற்றும் மொரிஷியஸில் உள்ள இந்து சமுத்திர எல்லை சங்க செயலகத்தின் பணிப்பாளர்களும் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

அந்நியச் செலாவணி அனுப்பல்

# 9 மாதங்களில் 4.35 பில். டொலர்களாக பதிவு

2023ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் இலங்கைக்கு அந்நியச் செலாவணி அனுப்புதல் 68.8 சதவீதம் அதிகரித்து 4.35 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது என்று நிதி அமைச்சகத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2022ஆம் ஆண்டு முதல் தற்போது வரை 511 ஆயிரத்துக்கும் அதிகமான இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைக்காக நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், இலங்கையின் வெளிநாட்டுப் பணியாளர்கள் இந்த ஆண்டு அதிக அந்நியச் செலாவணியை சட்ட வழிகள் மூலம் நாட்டுக்கு அனுப்பியுள்ளனர்.



செப்டெம்பரில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு பணியாளர்களின் நிதி 482.4 மில்லியன் டொலர்களாக காணப்படுவதாக திறைசேரி தரவுகள் சுட்டிக்காட்டுகின்றன.

வெளிநாட்டுப் பணப்பரி மாற்றங்களில் பதிவாகியுள்ள மேல்நோக்கிய போக்கு, தேசியப் பொருளா தாரத்துக்கு ஒரு நம்பிக்கையான அறிகுறியாகும், இது சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஊக்கமளிக்கும் நிதியுதவியை வழங்குகிறது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

குவைத்தில் இருந்து இலங்கைக்கு அதிகளவு வெளிநாட்டுப் பணம் அனுப்பப்படுவதுடன், சவூதி அரேபியா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் ஓமான் ஆகிய நாடுகள் இலங்கைத் தொழிலாளர்கள் அதிக அளவில் அந்நியச் செலாவணியை அனுப்பிய ஏனைய நாடுகளாகும் என்றார்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களிடமிருந்து இந்த பணம் அனுப்பப்படுவது, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு ஒரு முக்கிய அங்கமாக மாறியுள்ளது என்றும் விரிவடைந்து வரும் வர்த்தக பற்றாக்குறைக்கு எதிராக கணிசமான ஆதரவை வழங்குகிறது என்று நிதி அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# எப்போதும்ள...

கோஷங்கள் மற்றும் கட்அவுட் அரசியலுக்கு தான் எப்போதும் எதிரானவன் என்பதை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, புதிய அரசியல் பயணத்திற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149ஆவது ஆண்டு நிறைவு விழாவில் ஞாயிற்றுக்கிழமை (08) காலை கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்ற பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட ஜனாதிபதி, மட்டக்களப்பு செங்கலடி மத்திய கல்லூரிக்கு அருகில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பாரிய கட்அவுட்டை அகற்றுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

# காலி, மாத்தறையில்...

ஒக்டோபர் 15ஆம் திகதி நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வெள்ளம் மற்றும் பாடசாலைகளை மூடுவது பாதிப்பை ஏற்படுத்துமா என்பது இன்னும் தெரியவில்லை என மாத்தறை வலயக் கல்வி அலுவலகம் தெரிவித்துள்ளது.

வெள்ள நிவாரணங்களை வழங்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்திருந்த ஜனாதிபதி, உதவுவதற்கு ஆயுதப்படைகளை பயன்படுத்துமாறு பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்று முதல் உரம்

பெரும் போகத்துக்காக 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா உரத்தை இன்று (09) முதல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

சிலோன் உரக் கம்பனி மற்றும் கொழும்பு வர்த்தக உரக்கம்பனி ஆகிய நிறுவனங்களால் விநியோகப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உரத்தை கமநல சேவை நிலையங்களில் இருந்து கொள்வனவு செய்ய முடியும் எனவும் 50 கிலோ கிராம் யூரியா உர மூடை 9 ஆயிரம் ரூபாய்க்கு விற்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு இரசாயன உரம் அல்லது சேதன உரங்களை கொள்வனவு செய்வதற்கு ஹெக்டேருக்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கு வதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# விரலை கடித்த சாரதி தமிழகத்தில் கைது

எஸ். தில்லைநாதன்

மன்னார் பிரதேசத்தை சேர்ந்த தேவராஜன் முருங்கன் வைத்தியசாலையில் அம்பியூலன்ஸ் சாரதியாக பணி புரிந்து வந்த நிலையில், சில நாட்களுக்கு முன்னர் மற்றொரு வைத்தியசாலை ஊழியரான இரத்தினம் என்பவருடன் சேர்ந்து சுமார் 176 கிராம் ஐஸ் போதைப்பொருளை அம்பியூலஸில் கடத்தி வந்துள்ளார்.

வைத்தியசாலைக்கு வெளியில் வைத்து அதனை விற்பனை செய்தபோது இருவரையும் பொலிஸார் கைது செய்து விசாரணை செய்தவேளை விசாரணை செய்த பொலிஸ் உத்தியோகத்தரின் விரலை கடித்து விட்டு அங்கிருந்து தேவராஜன் முருங்கன் தப்பியுள்ளார்.




அவரை பொலிஸார் தேடி வந்த நிலையில், வெள்ளிக்கிழமை (07) தலைமன்னாரிலிருந்து கடல் வழியாக சட்டவிரோதமாக தப்பிச் சென்றுள்ளார். ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பணம் கொடுத்து படகில் புறப்பட்டு தனுஷ்கோடி அடுத்துள்ள மணல் திட்டில் இறங்கியுள்ளார்.

பின்னர் தங்கச்சிமடம் சூசையப்பர் பட்டினத்தைச் சேர்ந்த சந்தியா டைமன் என்பவர் நாட்டுப்படகில் தன்னை அழைத்து வந்து பாம்பன் குந்துகால் கடற்கரை அருகே இறக்கிவிட்டுச் சென்றதாக தேவராஜன் முருங்கன் கூறியுள்ளார் என தெரிய வந்துள்ளது. தேவராஜன் முருங்கன் மீது சட்டவிரோதமாகக் கடவுச்சீட்டு இல்லாமல் இந்தியாவுக்குள் ஊடுருவியதாக வழக்குப் பதிவு செய்த கரையோர பொலிஸார் விசாரணைக்குப் பின் ராமேஸ்வரம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி புழல் சிறையில் அடைக்க நடவடிக்கை எடுத்துள்ளனர் என அறியமுடிகின்றது.



## நித்திரை போனார் சாரதி: கார் போனது ஆற்றுக்கு

பதுளை - பண்டாரவளை பிரதான வீதியில் உடுவர நீலபோவில பிரதேசத்தில் கார் ஒன்று வீதியை விட்டு விலகி பதுலு ஓயாவில் விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எல்லயிலிருந்து பசறை நோக்கிச் சென்ற கார் ஒன்றே இவ்வாறு வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி உயரமான குன்றின் மீது விழுந்து பதுலு ஓயாவில் கவிழ்ந்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை (8) அதிகாலை 1.00 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், வாகனம் நீரில் மிதந்து கொண்டிருந்தபோது, உரிமையாளர் காரில் இருந்து இறங்கி பதுலு ஓயா வெள்ளத்தில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டதாக பொலிஸார் கூறியுள்ளனர்.

பிலியந்தலை பிரதேசத்தை சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

தற்போது பெய்து வரும் கடும் மழையினால் பதுலு ஓயாவின் நீர் மட்டம் இந்த நாட்களில் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## கொட்டகலையே 'சிசிரிவி' யாகும்

ஆ.ரமேஸ்.

கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கத்தின் மாதாந்த கூட்டத்தொடர் சனிக்கிழமை (07) கொட்டகலை ஸ்ரீ முத்துவிநாயகர் தேவஸ்தான ஆலய மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் தீபாவளி பண்டிகையை இலக்கு வைத்து கொட்டகலை நகரின் பாதுகாப்பினை உறுதி செய்ய தீர்மானித்துள்ள ஐக்கிய வர்த்தக சங்கம், நகருக்கு வரும் பொதுமக்களின் நன்மை கருதி பல்வேறு திட்டங்களை மேற்கொள்வதற்கு குறிப்பிட்ட கலந்துரையாடல் மூலம் தீர்மானங்களை எடுத்துள்ளது.

குறிப்பாக கொட்டகலை நகரில் அண்மைக் காலமாக வர்த்தக நிலையங்கள், வீடுகள் என பல இடங்களில் கொள்ளை சம்பவங்கள் இடம்பெற்று வருவதால், அவற்றை தடுக்கும் முகமாக நகர வர்த்தகர்களின் பங்களிப்பில் நகரம் முழுவதும் 32 சிசிரிவி கேமாராக்களை பொருத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பொறுத்தப்படும் பாதுகாப்பு கமராக்களை 24 மணித்தியாலமும் கண்காணிக்க திம்புள பத்தனை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை நியமிக்கவும் தீர்மானம் எடுத்துள்ளனர்.

இவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானத்தை திம்புளை பத்தனை பொலிஸார் ஏற்றுக்கொண்டுள்ளதுடன், அதற்கான முழுமையான ஆதரவை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதுதவிர குறிப்பிட்ட கலந்துரையாடலில் கொட்டகலை நகருக்கு வருகை தரும் நுகர்வோர்களுக்கு தேவையான பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்யவும், போயா தினங்களுக்கு அனைத்து கடைகளையும் மூடவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நகரில் பாதுகாப்பற்ற மரங்களை அகற்றவும் மேலதிக வகுப்புக்கு செல்லும் மாணவர்களை கண்காணித்து அவர்களின் கல்வி தரத்தை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



## தொழிலாளர்களுக்கான செயலமர்வு

பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷின் வேண்டுகோளுக்கு அமைய சர்வதேச தொழிற்சங்க சம்மேளனத்துக்கும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்துக்கும் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் மூலமாக பெருந்தோட்ட மலையகமெங்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களின் தொழில் சட்டம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் விசேட செயலமர்வுகள் நடைபெற உள்ளன. ஊவா முகாமைத்துவ நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை (08) இதன் முதற்கட்ட செயலமர்வு நடைபெற்றுள்ளது.





## மின்னலுக்கு ஒருவர் மரணம்; மூவருக்கு கடும் பாதிப்பு

எம்.ஏ.றமீஸ்ஒ

லுவில் வெளிச்ச வீட்டு பிரதேசத்தில் மின்னல் தாக்குதலுக்கு உள்ளாகி ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்த நிலையில், மூன்று பேர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஒலுவில் வெளிச்சம் வீட்டுக்கு அருகாமையில் சனிக்கிழமை (07) பிற்பகல் 2 மணியவில் வீச்சுவலை மூலம் மீன் பிடித்துக் கொண்டிருந்த 4 பேர் மின்னல், தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.



ஒலுவில் 2ஆம் பிரிவைச் சேர்ந்த சுபைதீன் நிஜாமுதீன் (34) ஸ்தலத்திலேயே மரணம் அடைந்துள்ளார்.

ஏனைய மூவரும் ஒலுவில் பிரதேச வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுச் செல்லப்பட்டுள்ளனர்.

## விபத்தில் இளம் தாய் உயிரிழப்பு

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - மன்னார் வீதியின் 4ஆம் கட்டை பகுதியில் வெள்ளிக்கிழமை (06) இரவு இடம்பெற்ற வீதி விபத்தில் இளம் தாயொருவர் உயிரிழந்துள்ளதுடன், மூவர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம் - சவீவபுரம் பகுதியைச் சேர்ந்த ரிஜான் சித்தி நிஹாரா (வயது 40) எனும் ஆறு பிள்ளைகளின் தாயாரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த தாய் தனது இரண்டு பிள்ளைகளுடன் முச்சக்கரவண்டி ஒன்றில் புத்தளம் சவீவபுரத்திலுள்ள தனது வீட்டிற்கு சென்றுகொண்டிருக்கும் போது புத்தளம்- 4ஆம் கட்டைப் பகுதியில் குறித்த முச்சக்கரவண்டி திடீரென வீதியினை கடந்து சென்ற கட்டாக்காலி மாடு ஒன்றுடன் மோதியதில் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதுடன், அதில் பயணம் செய்த முச்சக்கர வண்டி சாரதி உட்பட இளம் தாயும், இரண்டு பிள்ளைகளும் காயமடைந்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் உடனடியாக காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து சென்றபோதிலும், குறித்த இளம் தாய் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் முச்சக்கர வண்டி சாரதி மற்றும் உயிரிழந்த தாயின் இரண்டு பிள்ளைகளுக்கும் சிறிய அளவிலான காயங்களுடன் புத்தளம் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் புத்தளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## பலரும் 99இல் தப்பினர்: வீதிக்கும் பூட்டு!

பெய்து வரும் அடை மழையுடன், பெரகல - வெள்ளவாய ஏ4 வீதிக்கு கீழே பிளாக்வுட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (08) காலை பாரிய மண்மேடு சரிந்து வீழ்ந்தமையினால் குறித்த வீதியின் போக்குவரத்து முற்றாக தடைப்பட்டுள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலை 8 மணியளவில் வீதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்தபோது, அவ்வழியாக மோட்டார் சைக்கிளில் பயணித்த பலர் 99இல் தப்பியுள்ளனர் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வீதியில் பாறைகள் மண் மேடு சரிந்து வீழ்ந்துள்ளமையினால் குறித்த வீதியின் நூறு அடிக்கு மேலான பகுதி முற்றாக தடைப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

பண்டாரவளை- எல்ல -வெல்லவாய வீதியை மாற்று வீதியாக பயன்படுத்துமாறும் மண்சரிவு அபாயம் உள்ளதால் வாகனங்களை அவதானமாக செலுத்துமாறும் சாரதிகளிடம் பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், மாற்றுப் வீதியாக ஹலத்துதென்ன கிராவணகம நிகபோத ஊடாக வெல்லவாய செல்லும் குறுகிய வீதியையும் பொலிஸார் அறிமுகப்படுத்தியுள்ளனர்.

## குத்து விளக்குகள் மீட்பு; சந்தேக நபர் தப்பியோட்டம்



ரீ.எல் ஜவ்பர்கான்

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள ஆரையம்பதி பிரதேசத்தில் கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் மண்டபத்தை உடைத்து அங்கிருந்த இரண்டு பெறுமதியான வெங்கல குத்துவிளக்குகள் திருடப்பட்டுள்ளன.

குறித்த சம்பவத்தில் ஈடுபட்ட திருடன் தப்பிச் சென்றுள்ள போதிலும் குத்து விளக்குகளை ஆரையம்பதி கர்பலா பிரதேசத்தில் உள்ள பற்றைக் காட்டுக்குள் இருந்து ஞாயிற்றுக்கிழமை (8) மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான குறித்த குத்து விளக்குகளை திருடிய நபரை தேடி காத்தான்குடி பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வீட்டுப் பணிப்பெண்கள் இருவர் படுகொலை

மாத்தறையில் உள்ள வீடொன்றில் வீட்டுப் பணிப்பெண்ணாக கடமையாற்றிய மலம்படை மற்றும் வல்கம பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த முறைப்பாட்டின் பிரகாரம், சனிக்கிழமை (07) காலை வீட்டு உரிமையாளர் வீட்டை விட்டு வெளியேறி மாலையில் வீடு திரும்பிய போது, இரு வீட்டுப் பணிப்பெண்களையும் காணவில்லை என சம்பவம் தொடர்பான முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வீட்டின் பின்பக்க கதவு திறந்திருந்ததையடுத்து, பணிப்பெண்கள் இருவரும் வீட்டில் இல்லாததால், உரிமையாளர் பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

பொலிஸார் நடத்திய விசாரணையில், 67 மற்றும் 70 வயதுடைய இரு பெண்களும், பணிப்பெண்களுக்கென ஒதுக்கப்பட்ட குளியலறை மற்றும் கழிவறை பகுதிகளில் படுகொலை செய்யப்பட்டிருந்தது தெரியவந்துள்ளது.

இதன்போது அறை அலுமாரியில் வைக்கப்பட்டிருந்த தங்கம் அல்லாத 12 வளையல்கள், 02 அட்டியல்கள், ஒரு தங்க கரண்டி, 39 வெளிநாட்டு நாணயங்கள் உள்ளிட்ட பல்வேறு பெறுமதியான பொருட்கள் காணாமல் போயிருந்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையதாக நம்பப்படும் மாத்தறை, துடாவ பிரதேசத்தில் வசிக்கும் 25 வயதுடைய சந்தேக நபர் ஒருவரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர் வசம் இருந்த திருடப்பட்ட பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

## பெண் பொலிஸுக்கு நேர்ந்த சோகம்

கண்டியிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயிலில் பயணித்த பெண் பொலிஸ் பரிசோதகர் ஒருவரின் கழுத்தில் இருந்த தங்க சங்கிலியை, ரண்மலைகொடுவ ரயில் நிலையத்துக்கு அருகில் வைத்து ஒருவர் பறித்துச் சென்றுள்ளதாக கோட்டை பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

பதக்கத்துடன் கூடிய தங்க சங்கிலியின் பெறுமதி சுமார் 2,22,500 ரூபாய் மதிப்புள்ளதாகவும் பொலிஸ் பரிசோதகர் செய்த முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பொலிஸ் பரிசோதகர் கண்டி, கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றுபவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கருமேகம் களையப்படுவதே நாட்டுக்கும் உலகுக்கும் நல்லது

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையிலான போரின் உக்கிரம் குறைந்துள்ளபோதிலும், அவ்வப்போது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. தரை,கடல் மற்றும் வான் வழி தாக்குதலுக்கு அப்பாற் சென்று, டிரோன் மூலமான தாக்குதல்களே முன்னெடுக்கப்படுகின்றன. இதனால், கடுமையான சேதங்களும் ஏற்படுகின்றன. எதிரிகளால் அனுப்பப்படும் டிரோன்களும் சுட்டு வீழ்த்தப்படுகின்றன. இந்த யுத்தத்துக்கு இன்று (09) திங்கட்கிழமையுடன் 593 நாட்கள் நிறைவடைகின்றன.

இந்த யுத்தத்தால் அவ்விரு நாடுகள் மட்டுமன்றி, அண்டைய நாடுகளும், ஏன்? உலகின் பல நாடுகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஏற்றுமதி, இறக்குமதியில் பாரிய தாக்கத்தை செலுத்தின. கொரோனாவுக்குப் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக தலையைத் தூக்கியபோது, சம்மட்டியால் ஓங்கி தலையில் அடித்தாற்போல ரஷ்ய-உக்ரேன் யுத்தம் நாடுகளை ஆட்டிப்படைத்தது.

இதனிடையே, இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான மோதல் 2023 ஒக்டோபர் 07ஆம் திகதி சனிக்கிழமை நடத்தப்பட்ட அதிரடியான தாக்குதல் மூலமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த மோதலுக்கு உலகின் பல நாடுகளும் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன. இலங்கை உள்ளிட்ட சில நாடுகள் கரிசனையையும் காண்பித்துள்ளன. ஒருசில நாடுகள் இஸ்ரேலுக்கு முழுமையான ஆதரவை வெளிப்படையாகவே தெரிவித்துவிட்டன. இதற்கிடையே ஐ.நா பாதுகாப்பு பேரவையும் கூடி கலந்துரையாடியுள்ளது.

உலகில் வாழும் ஒவ்வொருவரும் அமைதியான சூழலையே விரும்புகின்றனர். எனினும், தவிர்க்க முடியாத காரணங்களால் உள்நாட்டு மோதல்களிலும் நாடுகளுக்கு இடையிலான மோதல்களிலும் சிக்கித் தவிர்த்துக்கொண்டிருக்கின்றனர். இன்னும் சிலர், அமைதியான நாடுகளுக்கு இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு யுத்தத்தின் தாக்கத்தை அவ்வாறானவர்கள் அனுபவித்துள்ளனர்.

உலகை பொருத்தவரையில், அமைதியான நாடுகள் பட்டியலில் ஐஸ்லாந்து முதலிடத்தில் உள்ளது. 2008 முதல் முதலிடத்திலேயே இருக்கின்றது. இன்ஸ்டிடியூட் ஃபார் எகனாமிக்ஸ் அண்ட் பீஸ் என்ற அமைப்பு வெளியிடும் குறியீட்டில், சமூகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு, உள்நாட்டு மற்றும் சர்வதேச மோதல்கள், இராணுவ மயமாக்கல் அமைதியான சூழல், பொருளாதாரம், அமைதி, வளர்ச்சி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த பட்டியல் தயாரிக்கப்படுகின்றது.

இந்தாண்டு மொத்தம் 163 நாடுகள் பட்டியலில் இடம் பிடித்துள்ளன. 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84 நாடுகளில் நிலைமை மேம்பட்டிருந்தது. அதேநேரம் 79 நாடுகளில் அமைதி மோசமாகியுள்ளது. ஆப்கானிஸ்தான் தொடர்ந்து 8 ஆண்டுகளாகக் கடைசி இடத்தில் இருக்கிறது. இலங்கை 107ஆவது இடத்தில் இருக்கிறது. இந்த காலகட்டத்தில் சர்வதேச நாடுகளின் அமைதி 5 சதவீதம் வரை குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இஸ்ரேல்-பாலஸ்தீனத்துக்கு இடையிலான மோதல் யுத்தமாக விஸ்வரூபம் எடுக்கும் முன்னர், யுத்த மேகம் களையப்படவேண்டும்.

அதேபோல, இலங்கையில், ஆங்காங்கே வம்புக்கு இழுப்பதைப் போல, காணிகளை அபகரித்து, சிறுபான்மையினர் மீது சீண்டிப்பார்க்கும் செயற்பாடுகளும் களையப்படவேண்டும். யுத்த கருமேகம் களையப்படுவது உலகுக்கும், மோதல் சீண்டல்கள் களையப்படுவது நாட்டுக்கும் நல்லது.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

மனிதரின் வாழ்க்கை குறுகியது, நிலையற்றது என சிலருக்கு நன்கு புரியும். ஆனால், பெரும்பாலானோருக்கு இது புரிவதே இல்லை.

வாழ்க்கை குறுகியது எனத் தெரிந்தும், சொத்துகளைக் குவிக்கிறார்கள். அநேகர் தான தர்மங்களைச் செய்வதுமில்லை. எங்கும் சுயநலமே கோலோச்சுகின்றன.

வாழ்க்கையில் அடுத்து என்ன நடக்கும் என்று, எவருக்கும் உறுதியாகச் சொல்ல முடியாது. எனினும், நாம் வாழும் பூமிக்கு சின்னச் சின்ன உதவிகளையாவது எம்மால் செய்ய முடியும். நாளைக்கு நான் செய்ய இருக்கிறேன் எனச் சொல்வது நகைப்புக்கு உரியது. நாளை என்பது எவருக்கும் நிரந்தரமானது இல்லை.

ஆதனால், நாங்கள் எண்ணிய நல்ல காரியங்களை, உடனே செய்ய வேண்டும். கூடியவரை பிறகு செய்வோம் எனக் கடத்தக்கூடாது.

செல்வந்தர்கள் அறப்பணிகள் செய்வதை உடனே செய்தால், பயன் கிடைக்கும். அடுத்த வினாடி மனம் மாறுவது மனித இயல்பு.

தேவையில்லாத விடயங்களில், ஆர்வமாக இருப்பவர்கள், சிறப்பான காரியங்களைச் செய்வதற்கு ஏன் தயங்க வேண்டும்? நற்காரியங்களை உடன் செய்க!

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம்: வெளிப்பாட்டு உரிமைக்கு பெருஞ்சவால்



என்.கே.அஷோக்பரன்

நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவைத் தாபிப்பதற்கும், இலங்கையில் நிகழ்வுபற்றிய குறித்த சில கூற்றுக்களின் நிகழ்நிலைத் தொடர்பாடலை தடைசெய்வதற்கு ஏற்பாடு செய்வதற்கும், தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலைக் கணக்குகள் மற்றும் மெய்யுறுதிப்படுத்தப்படாத நிகழ்நிலைக் கணக்குகளின் பயன்பாட்டைத் தடுப்பதற்கும், இலங்கையில் தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் நிகழ்நிலை அமைவிடங்களை அடையாளங்கண்டு வெளிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செயவதற்கும், நிகழ்வுபற்றிய பொய்யான கூற்றுக்களின் தொடர்பாடலுக்கு நிதியளித்தல் மற்றும் வேறு ஆதரவை ஒடுக்குவதற்கும் அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடை விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம் என்று நிகழ்நிலைக் காப்பு சட்டமூலம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரினால் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

நிகழ்நிலை (online), அதாவது, இணையப் பயன்பாடு சார்ந்த விடயங்களில் பாதுகாப்பு என்பது பலதரப்பிற்கும் அவசியப்படும் ஒன்றாக இருக்கிறது. மிகக் குறிப்பாக குழந்தைகள், பெண்கள் தொடர்பில் இதன் அவசியப்பாடு உலகளவில் கணிசமாகவே உணரப்பட்டுள்ளது. இதில் யாருக்கும் எந்த மாற்றுக்கருத்தும் இருக்க முடியாது.

நிகழ்நிலைக் காப்பு சட்ட மூலம் என்பது நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழு என்ற ஒரு ஆணைக்குழுவை நிறுவ முனைகிறது. இலங்கையில் சில தகவல் அறிக்கைகளை இணையம் ஊடாக தொடர்பாடல் செய்வதை தடைசெய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக நிகழ்நிலைக் கணக்குகள் மற்றும் நம்பகத்தன்மையற்ற நிகழ்நிலைக் கணக்குகள் மற்றும் பிற தொடர்புடைய விடயங்களைப் பயன்படுத்துவதைத் தடுக்கவும் இந்த ஆணைக்குழுவிற்கு அதிகாரமளிக்கப்பட சட்ட மூலம் முனைகிறது. சட்ட மூலத்தின் பிரிவு 6இன் விதிகளுக்கு உட்பட்டு, ஆணையம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்கும். அவர்களின் பதவிக்காலம் 3 ஆண்டுகளாகும்.

தடைசெய்யப்பட்ட தகவல் என்று ஆணைக்குழு தீர்மானிக்கும் தகவல்கள் இணையம் ஊடாக தொடர்பாடல் செய்யப்படுவதை, இணையச்சேவை வழங்குநர்களுக்கு உத்தரவிடுவதனூடாக தடைசெய்யும் அதிகாரத்தை குறித்த ஆணைக்குழு பெற்றிருக்கும். இலங்கையில் உள்ள இறுதிப் பயனர்களால் தடைசெய்யப்பட்ட தகவலை உள்ளடக்கிய நிகழ்நிலை இருப்பிடத்திற்கான அணுகலை முடக்க அல்லது அத்தகைய நிகழ்நிலை இருப்பிடத்தில் இருந்து தடைசெய்யப்பட்ட அறிக்கையை அகற்றுவதற்கு எந்தவொரு இணைய அணுகல் சேவை வழங்குநர்களுக்கும் அல்லது இணைய இடைத்தரகர்களுக்கும் உத்தரவுகளை வெளியிட ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இருக்கும். இவ்வாறாக இந்த சட்ட மூலம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன். இது சார்ந்த பல்வேறு விடயங்களும் தண்டனைக்குரிய குற்றங்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

தவறாக தகவல்களை தடைசெய்வது நல்லதுதானே என்று அப்பாவித்தனமாக சிலர் வினவலாம். இங்கு முதற் கேள்விகள், எது தவறான தகவல், அதனை யார் தீர்மானிப்பது என்பவைதான்.

சரியான தகவல், தவறான தகவல் என்று தீர்மானிக்கும் வல்லமை ஒரு ஆணைக்குழுவிற்கு இருக்கிறதா என்ற அடிப்படைக் கேள்வியிலிருந்து நாம் ஆரம்பிக்க வேண்டும். இந்த இடத்தில் ஜோர்ஜ் ஓவெலின் 1984 நாவலும், அதில் இடம்பெறும் உண்மைக்கான அமைச்சும் ஞாபகத்திற்கு வருகிறது. “மினிட்ரூ” என்று 1984 நாவலில் அழைக்கப்படும் உண்மை அமைச்சகம், பெரியண்ணனின் அடக்குமுறை ஆட்சிக்குள் சர்வாதிகாரக் கட்டுப்பாடு மற்றும் பிரசாரத்தின் மைய அடையாளமாக செயல்படுகிறது. கதையில், ஆளும் கட்சியின் தற்போதைய கதை மற்றும் சித்தாந்தத்துடன் ஒத்துப்போக, வரலாற்றுப் பதிவுகளை மாற்றுவதற்கும் தகவல்களைக் கையாளுவதற்கும் உண்மை அமைச்சகம் பொறுப்பாகும். குடிமக்களின் மனங்கள் மற்றும் உணர்வுகளின் மீது முழுமையான அதிகாரத்தைத் தக்கவைக்க வஞ்சகத்தையும் உண்மையை சிதைப்பதையும் நிலைநிறுத்துவதால், அமைச்சகத்தின் பெயரில் சிலிர்க்க வைக்கும் முரண்பாடு உள்ளது. நிகழ்நிலைக் காப்பு என்பது போல, நாவலின் கதாநாயகனும், உண்மை அமைச்சகத்தின் பணியாளருமான, வின்ஸ்டன் ஸ்மித், உண்மைகளின் பரவலான கையாளுதலை நேரடியாக அனுபவிப்பதைச் சித்திரிக்கும் இந்தக் கதை, ஒரு சர்வாதிகார ஆட்சியின் நலன்களுக்கு சேவை செய்வதற்காக உண்மை ஆயுதமாக்கப்படும் மற்றும் வரலாறு மீண்டும் எழுதப்படும் ஒரு சமூகத்தின் ஆபத்துகளை விளக்குகிறது.

1984 நாவலில் உள்ள உண்மை அமைச்சகம், அரசாங்கமானது தகவல்களின் மீது அதீத கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கும், அதன் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்றவாறு யதார்த்தத்தை கையாளுவதற்கும் ஒரு அரசாங்கத்திற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய ஜோர்ஜ் ஓவெலின் எச்சரிக்கையை வெளிப்படுத்தி நிற்கிறது. வரலாற்றை மாற்றி எழுதவும், உண்மைகளை மாற்றவும், மற்றும் பிரசாரத்தை பரப்பவும் திறன் கொண்ட ஒரு அதிகாரத்தின் ஆபத்துகளை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஜோர்ஜ் ஓவெலின் சித்திரிப்பானது உண்மை, விமர்சன சிந்தனை மற்றும் விழிப்புணர்வு ஆகியவற்றின் முக்கியத்துவத்தை ஒரு சமூகத்தின் துல்லியமான தகவலுக்கான அணுகலைப் பாதுகாப்பதிலும், மட்டுப்படுத்தப்படாத அதிகாரம் மற்றும் உண்மையைக் கையாளுதலின் விளைவாக ஏற்படும் அடிப்படை சுதந்திரங்களின் அரிப்புக்கு எதிராகப் பாதுகாப்பதிலும் ஒரு அப்பட்டமான நினைவூட்டலாக செயல்படுகிறது.

நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவும் ஜோர்ஜ் ஓவெலின் உண்மை அமைச்சகம் போலத்தான்! எது தவறான தகவல் என்று தீர்மானிப்பதன் ஊடாக, அதிகாரம் எதனை விரும்பவில்லையோ அதனை தடைசெய்யும் வல்லமை இந்த நிகழ்நிலைக்காப்பு ஆணைக்குழுவிற்கு வழங்கப்படுவதனூடாக, மக்களின் வெளிப்பாட்டுரிமை அடிப்படையில் கிள்ளியெறியப்படுகிறது.

இதற்கு இணையத்தை பாதுகாப்பான இடமாக மாற்றுதல் என்பது ஒரு சாட்டாகச் சொல்லப்படுகிறது. யாருக்கு பாதுகாப்பான இடம் என்பதுதான் இங்கு கேள்வி. அரசாங்கமும், அதிகாரத்திலுள்ளவர்களும், தமக்கெதிரானதும், தமது நலன்களுக்கு எதிரானதுமான கருத்துக்களை நசுக்குவதற்கு சட்டங்களை உருவாக்குவது ஜனநாயக விரோதமானது. கருத்துச் சுதந்திரம் என்பதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை. அரசாங்கமானது விமர்சிக்கப்பட வேண்டும். அதனைத் தடுப்பது ஜனநாயக விரோதம்.

தனிநபர்களுக்கு எதிரான அவதூறுகள் பரப்பப்பட்டால், அவ்வாறு பரப்புகிறவருக்கு எதிராக அவதூறு வழக்குத்தாக்கல் செய்ய பாதிக்கப்பட்டவரால் முடியும். அதற்கு சட்டத்தில் இடமிருக்கிறது. ஆபாசமாக விடயங்களை பரப்பப்படுவதைத் தடுக்க, அதற்கான சட்டங்களும், குற்றவியல் சட்டக்கோவையும் இருக்கிறது. ஆகவே புதிதாக நிகழ்நிலை காப்பு ஆணைக்குழு வந்துதான் இதனைச் செய்ய வேண்டும் என்பது இல்லை. “தவறான தகவல்” பரவுவதைத் தடுக்கிறோம் என்ற பெயரில் பேச்சுச்சுதந்திரத்தை நசுக்குவது ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் சதி! இதனால்தான் இந்த நிகழ்நிலைக் காப்பு சட்டமூலத்தை சர்வதேச சட்டவல்லுனர்களின் ஆணைக்குழு, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உள்ளிட்ட அமைப்புக்கள் விமர்சித்துள்ளன. சர்வதேச சட்டவல்லுனர்களின் ஆணைக்குழுவானது, தனது அறிக்கையில், புதிதாக முன்மொழியப்பட்ட நிகழ்நிலைக் காப்பு சட்டம், அதன் தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டால், சுதந்திரமான வெளிப்பாட்டை நசுக்குவதற்கும், இலங்கையில் ஏற்கனவே சுருங்கி வரும் குடிமை இடத்தை மேலும் சுருக்குவதற்கும் உதவும் என்றும், சட்ட மூலத்தின் பல பிரிவுகள், தகவல் மற்றும் கருத்து சுதந்திரம் உட்பட, நாட்டில் மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களைப் பயன்படுத்துவதைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்றும், நிகழ்நிலை காப்பு ஆணையம் மற்றும் பிற நிபுணர்களின் அமைப்பு, நியமனம் மற்றும் செயல்பாடுகள், தண்டனைக்குரிய குற்றங்கள் ஆகியன தேவையற்றதாகவும் சமச்சீரற்றதாக அமைகிறது என குறிப்பிடப்படுவதுடன், நடத்தையின் தெளிவற்ற மற்றும் மிகைப்படுத்தப்பட்ட வார்த்தைப் பயன்பாடுகள் கவலைக்குரியவை என்றும் விமர்சித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த நிகழ்நிலைக் காப்பு சட்டமூலமானது மக்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் பாரதூரமாகப் பாதிக்கும் என்றும், இது நாட்டின் ஜனநாயகத்தையும், சட்டத்தின் ஆட்சியையும் கடுமையாகப் பாதிக்கும் என்று குறிப்பிட்டுள்ளது.

சுதந்திரம் என்பதற்கு அர்த்தம் இருக்க வேண்டுமென்றால், அது மக்கள் கேட்க விரும்பாததைக் கூட, மக்களுக்கு சொல்லக் கூடிய உரிமை என்பதாக இருக்க வேண்டும் என்றார் ஜோர்ஜ் ஓவெல். விமர்சனங்களை எதிர்கொள்ளப் பயந்துகொண்டு, சட்டத்தைக் கொண்டு, மக்களின் கருத்துச்சுதந்திரத்தை நசுக்க முயல்பவர்கள் ஜனநாயக விரோதிகள். அதற்கு மக்கள் பாதுகாப்பு, இணைய பாதுகாப்பு, குழந்தைகள் பாதுகாப்பு என்று போலிச்சாக்குகளை அவர்கள் சொல்லலாம். ஆனால் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும்.

## கடிதங்கள்

### வீதி அபிவிருத்தி அதிகாரசபையினரின் கவனத்துக்கு

சாவகச்சேரி - பருத்தித்துறை இணைப்பு வீதி (தபாற்கந்தோர் வீதி) புனரமைப்புப் பணியின்போது நீர் வடிந்தோடுவதற்கான ஏற்பாடுகளையும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் மேற்கொள்ள வேண்டும் என சாவகச்சேரி கெருடாவில் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


சாவகச்சேரி - பருத்தித்துறை வீதி (தபாற்கந்தோர் வீதி) புனரமைப்புப் பணி தற்போது துரித கதியில் இடம்பெற்று வருகிறது. இந்நிலையில், கெருடாவில் பகுதியில் மாரி காலத்தில் வெள்ள நீர் வடிந்தோடி குளத்திற்குச் செல்லும் முகமாக கெருடாவில் சந்தியில் வீதியைச் சற்று தாழ்வாக அமைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையி டம் கோரிக்கை விடுத்திருந்தோம்.

கெருடாவில் சந்தியில் நீர் பாய்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்தாத பட்சத்தில் மாரி காலத்தில் அப்பகுதி மக்கள் கடும் சிரமங்களை எதிர் கொள்ள நேரிடும். எனவே இதனைக் கருத்திற்கொண்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் நீர் வடிந்தோட ஏற்ற வகையில் தபாற்கந்தோர் வீதியைப் புனரமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர் .

பு.கஜிந்தன்

# முடங்கும் மூலிகை மருத்துவம்




ரிகாஸா ரியாஸ்
இரண்டாம் வருடம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

முக்கால தலைமுறையினருக்கும் முடிவில்லா பயனை வழங்கும் மூலிகைகள் இன்றளவில் மக்கள் மத்தியில் குறைவான பயன்பாட்டிலேயே காணப்படுகின்றது. இயற்கையில் கிடைக்கும் எண்ணிலடங்கா மருத்துவ குணங்களைக் கொண்ட செடிகளைக் கொண்டு பல்வேறுபட்ட நோய்களைக் குணப்படுத்தும் மருத்துவ முறையாகவே மூலிகை மருத்துவம் காணப்படுகின்றது.

ஆங்கில மருத்துவத்தின் வருகைக்கு முன்னர் மூலிகைகளை நம்பியே மக்களின் வாழ்க்கை நகர்ந்தது. பழங்காலம் தொடக்கம் தற்காலம் வரை மருத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும் மனிதனுக்கான நோய் நிவாரணியாகவே மூலிகைகள் பயன்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சாதாரணமாகவே மூலிகைகள் பக்க விளைவுகள் அற்றவை என்றாலும் மனிதன் மூலிகைகளைப் பயன்படுத்துவதில் தயக்கம் காட்டும் தன்மையினையும் அவதானிக்கலாம். நகர்ப்புறங்களில் மூலிகைகளைப் பெற்றுக் கொள்வது கடினமானதாக இருந்தாலும் கிராமப்புறங்களில் காணும் இடங்களில் எல்லாம் மூலிகைகளின் வாசனையையே உணரக்கூடியதாக இருந்தது.

தற்போது அந்நிலை மாற்றம் கண்டு கிராமப்புறங்களில் மூலிகைகள் அருகி வருவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகமாகவே காணப்படுகின்றது. நூற்றுக்கும் மேற்பட்ட மூலிகைகள் மனிதனுக்கு பயன்படும் வகையில் இயற்கையில் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இரத்த அழுத்தம், இதய நோய், இரத்த சோகை, உடற்சோர்வு, சர்க்கரை நோய், தோல் சம்பந்தமான நோய்கள் என்பவற்றைத் தீர்க்கும் சக்தி கொண்டதாகவே மூலிகைகள் காணப்படுகின்றது. மூலிகைகளைத் தோட்டங்களாக அமைத்து பயன்பெறுபவர்களுக்கு மத்தியில் மூலிகைகளின் பயன் அறியாது அவற்றை அலட்சியம் செய்பவர்களும் இருக்கவே செய்கின்றார்கள்.

தற்காலத்தில் பெருகிவரும் நாகரிக வளர்ச்சி மற்றும் உணவுப் பழக்க வழக்கங்களின் மாற்றங்கள் காரணமாக நவீன மற்றும் விரைவுணவுகளுக்கே மனிதன் அதிகம் பழக்கப்பட்டுள்ளான். எனவே இயற்கை உணவுகளை தவிர்க்கும் மனிதனுக்கு ஏற்படக்கூடிய உடல்நல நோய்களுக்கு உடனடி நிவாரணியாக மூலிகைகள் உதவும் என்பதை யாராலும் மறுக்க முடியாது.

உடல்நலம் மற்றும் உடற் சமநிலையைப் பேணுவதில் மூலிகைகளுக்குப் பாரிய பங்குண்டு என்றே கூறலாம். உடற்சூடு, பித்தம், வயிற்றுப்புண் முதலான நோய்களுக்கான சிறந்த மருந்தாகவே கற்றாழை பயன்படுத்தப்படுகின்றது. காய்ச்சல், இருமல், ஈரல் சம்பந்தமான நோய்கள், ஜீரணப் பிரச்சினைகள், காது வலி மற்றும் இரத்தத்தில் உள்ள விஷத்தன்மையை வெளியேற்றி சுத்தம் செய்யும் மூலிகையாக துளசிச்செடி காணப்படுகின்றது.







விஷத்தன்மையினை உறிஞ்சும் சக்தியைக் கொண்டிருக்கும் மூலிகைகளுள் வசம்பு முக்கியம் பெறுகின்றது என்றே கூறலாம். முன்னைய காலங்களில் வீட்டில் வசம்பு இல்லாமல் இருக்காது. ஏனென்றால் பிறக்கும் கைக்குழந்தைக்கு தினமும் வசம்பு உரசி வாயில் வைப்பார்கள். அதற்குக் காரணம் குழந்தை சாப்பிடும் உணவிலோ அல்லது அலர்ஜியினாலோ இரத்தத்தில் எதுவும் பரவக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையினாலாகும்.

அதிக கல்சியம் கொண்ட தூதுவளை நீண்ட நாட்கள் சென்றும் நீங்காத இருமலைக் குறைக்கும் சக்தியைக் கொண்டுள்ளது. இரத்த ஓட்டத்தை சீராக இயக்க அருகம்புல் உதவுவதைப் போல ஆடாதோடை கர்ப்பிணிகளின் சுகப்பிரசவத்திற்கும் வழிவகுக்கும். நாம் தினமும் உணவில் சேர்க்கும் கறிவேப்பிலையில் இரும்புச் சத்து, கல்சியம், விட்டமின் A, விட்டமின் C முதலான எண்ணற்ற கூறுகள் அடங்கியுள்ளது. அனைவர் வீட்டிலும் இருக்க வேண்டிய கற்பூரவல்லி உடலில் வெள்ளை அணுக்களை அதிகரிக்கச் செய்கின்றது.

காற்றைத் தூய்மைப்படுத்தும் குணம் கொண்டதும் சளி உட்பட சுவாச கோளாறுகளுக்கு மிகவும் ஏற்றதுமான மூலிகைச் செடியாக திருநீற்றுப்பச்சிலை பயன்படுத்தப்படுகின்றது. தற்காலத்தில் பரந்துபட்ட வகையில் காணப்படும் புற்றுநோயை குணப்படுத்தக் கூடிய மருந்துப் பொருட்களைத் தயாரிக்க உதவும் மூலப்பொருளாக நித்திய கல்யாணி என்னும் மூலிகை பயன்படுத்தப்படுவது நம்மில் பலர் அறியாத விடயமாகும். சிறுநீரகத்தில் உண்டாகும் கல்லை கரைக்கும் சக்தியை ரணகள்ளி என்ற மூலிகை கொண்டுள்ளது.

குப்பைமேனி நச்சுக்கடிகளுக்கு உதவுவதோடு பசியை தூண்டவும் உதவுகின்றது.

அதுமட்டுமன்றி, தங்கள் தோட்டங்களில் கிடைக்கும் முருங்கை முறிந்த எலும்பை விரைவில் கூட்டுவதோடு வீக்கத்தைக் குறைக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளது. வாய்ப்புண் மற்றும் குடற்புண்களை அகற்ற மணித் தக்காளிக் கீரை உதவுகின்றது. குழந்தைகளின் ஞாபக சக்தியை இலகுவில் பேணுவதற்கும் மூளையின் வளர்ச்சியை சீரான முறையில் கடைபிடிப்பதற்கும் வல்லாரை பயன்படுகின்றது.

புதினா, நொச்சி, நிலவேம்பு, பூனைமீசை, நன்னாரி முதலான இன்னும் பல மூலிகைகள் மனிதனுக்கு ஏற்படக்கூடிய நோய்களைக் குணப்படுத்தும் சக்தியைக் கொண்டுள்ளது. நோய் நிலைமைகளுக்கான நிவாரணியாக மூலிகைகளைப் பயன்படுத்துவது பக்கவிளைவற்ற பயனையே மக்களுக்கு வழங்கும் என்பதே யதார்த்தத்தின் உண்மையாகவும் காணப்படுகின்றது.

இன்றைய காலத்தைப் பொறுத்த வரையில், கிராமங்களில் பிரத்தியேகமான பராமரிப்பில் மூலிகைகள் வளர்க்கப்படுவதில்லை. மாறாக, இயற்கையின் வளமாய் மூலிகைச் செடிகள் கிராமங்களில் பரந்தளவில் வளர்ந்து காணப்பட்டாலும், அதனையும் மனிதன் அழித்து விடும் தன்மையே காணப்படுகின்றது. அதிகம் கிடைக்கும்போது மனிதனுக்கு அலட்சியம் உண்டாகும் என்பதற்கு மூலிகைகளே சாட்சியாகவும் விளங்குகின்றது.

அவ்வகையில், மூலிகைகளால் இலகுவில் குணப்படுத்தக்கூடிய நோய்களுக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தாது ஆங்கில மருத்துவத்தை நாடுவது மூலிகைகள் அருகி வருவதற்கு முதற்படியான காரணியாகவும் அமைகின்றது. அதுமட்டுமன்றி, மூலிகைகளைப் பாதுகாப்பதற்கு பெரும் சவாலாகவும் இந்நிலை மாறி வருகின்றது.

ஆரம்பகால மனிதன் காடு வழியாகவே அதிக பயணங்களை மேற்கொண்டான். அவ்வாறான பயணங்களின் போது தன்னைத் தீண்டும் விஷ ஜந்துக்களின் விஷங்களை அகற்ற காடுகளில் கிடைத்த மூலிகைகளையேப் பயன்படுத்தினான். அந்தளவிற்கு மனிதன் இயற்கையுடன் ஒன்றித்து வாழ்ந்த தன்மையே காணப்பட்டது.

தற்காலத்தில் தங்கள் கைகளிலேயே மூலிகைகள் கிடைத்தாலும் மனிதன் அதன் பயனை உணராமலே இருக்கின்றான்.

ஆங்கில மருத்துவம் மட்டும் தான் தங்கள் நோய்களைக் குணப்படுத்தும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் வேரூன்றி காணப்படுவதனாலும் மூலிகைகளும் மூலிகை மருத்துவமும் அருகிச் செல்லும் போக்கினைக் காணலாம்.

கிராமங்களில் அருகிச்செல்லும் மூலிகைகள் அழிந்து விடாமல் பாதுகாக்கப்படுமானால் மூலிகைகளின் மருத்துவப் பயனை அனைவராலும் அனுபவிக்க கூடியதாகவே இருக்கும். கிராமங்களின் இடவசதியும் மக்களின் பாரம்பரியம் பேணும் பழக்கவழக்கங்களும் மூலிகைச் செடிகளை வளர்ப்பதற்கான சிறந்த சூழலையே வழங்குகின்றது.

இச்சூழலை சிறந்த வகையில் பயன்படுத்தாமலும் மூலிகைகளின் பெறுமதியை உணராமலும் அதனை மக்கள் உதாசீனம் செய்கின்றனர். இதனைத் தவிர்த்து இயற்கை வழங்கும் மூலிகைகளைக் கரிசனை கொண்டு வளர்ப்பதும் வளரும் மூலிகைகளைப் பாதுகாப்பதும் முடங்கி வரும் மூலிகைகளைக் காப்பதற்கான சிறந்த வழிமுறையாகும்.

ஆங்கில மருத்துவத்திற்காக பணத்தை செலவு செய்வதைத் தவிர்த்து இயற்கை இலவசமாக வழங்கும் மூலிகையானது மனிதனை இயற்கையாகக் குணப்படுத்தும் வல்லமையையும் கொண்டுள்ளது.

நோய் நொடியற்ற நிம்மதியான வாழ்வையே மனிதன் விரும்புகின்றான்.

அவ்வாழ்வை தேடுவதற்காக நவீனத்தைப் பின்தொடராது பழைமையின் பேணுதலை பேணுவதன் ஊடாக மனிதனின் ஆயுளும் நீடிக்கும். கிராமங்களில் இயற்கையில் கிடைக்கும் மூலிகைகளை அருகிச்செல்ல வழி அமைக்காமல் மூலிகைகளின் பயன்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி மூலிகை மருத்துவத்தின்பால் மக்களைத் தூண்டச் செய்யும் பட்சத்தில் அருகிச்செல்லும் மூலிகைகளைப் பாதுகாத்து பயன் பெறுவதற்கான வழிகளையும் அதிகரிக்கச் செய்ய முடியும்.

மூலிகை மருத்துவத்தில் தேர்ச்சி பெற்றவர்களுள் ஒருவரை அணுகி மருத்துவத்தின் செய்முறைகளை விளங்கி வைக்கும் ஆர்வம் ஒவ்வொரு தனி நபரிடமும் காணப்படுமானால் அக்கிராமத்தில் மூலிகைகளின் கேள்வி அதிகரித்து மக்களாலேயே மூலிகைகள் பயிரிடும் நிலை உண்டாகும்.

# முன்பள்ளி மாணவர்களை பாதுகாக்கும் ஹேமாஸ்



அண்மைக் காலங்களில் சிறுவர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் வன்முறைகளை கவனத்தில் கொண்டு, ஹேமாஸ் அவுட்ரீச் மையம் (HOF), இலங்கை குழந்தைநல வைத்தியர் கல்வியகம் மற்றும் சிறுவர் ஆரம்ப விருத்திக்கான தேசிய செயலகம் ஆகியவற்றுடன் கைகோர்த்து, நாடளாவிய ரீதியில் முன்பள்ளி சிறுவர்கள் மத்தியில் தம்மை துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க முன்வந்துள்ளது.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபவத்தில், எமது சமூகத்தின் இளம் அங்கத்தவர்களை பாதுகாப்பது மற்றும் வலுவூட்டுவதற்கு அவசியமான சாதனங்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தி சுவரொட்டி, குறு இசை மற்றும் வீடியோ ஆகியன அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

உலகளாவிய ரீதியில், நல்ல தொடுகை மற்றும் தீய தொடுகை தொடர்பான விழிப்புணர்வு, இளம் சிறார்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்டு வருவதுடன், இந்த முக்கியத்துவம் வாய்ந்த தகவலை இலங்கைக் கொண்டு வரும் பணிகளை HOF தற்போது மேற்கொள்கின்றது. துஷ்பிரயோகத்தை சிறார்கள் எதிர்நோக்கல், பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடுகைகள், பாதுகாப்பற்ற சூழ்நிலைக்கு முகங்கொடுத்தால், பெற்றோர்களை அல்லது நம்பிக்கைக்குரிய வயது வந்தவரை நாடல் போன்றன தொடர்பில் விழிப்புணர்வூட்டுவது இந்தத் திட்டத்தின் பிரதான இலக்காகும்.

ஹேமாஸ் அவுட்ரீச் மையம் மற்றும் இலங்கை AYATI மையம் ஆகியவற்றின் நிறைவேற்று பணிப்பாளர் ஷிரோமி மசகொரல இந்தத் திட்டம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில், “துஷ்பிரயோகங்களை தவிர்ப்பதற்கு முன்பள்ளி சிறுவர்களுக்கு வலுவூட்டுவது முக்கியமானது என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். குறு இசைகள் மற்றும் செயற்பாடுகள் போன்றன தினசரி முன்பள்ளிச் செயற்பாடுகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, சிறுவர்களுக்கு அவ்வாறான நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது தொடர்பான தெளிவுபடுத்தல் வழங்கப்படும். மேலும், நாடு முழுவதையும் சேர்ந்த 19,000க்கும் அதிகமான முன்பள்ளிகளில் இந்த சுவரொட்டிகள் காட்சிப் படுத்தப்படும். இதனூடாக காட்சி வெளிப்பாட்டை மேற்கொள்ள முடியும். சகல சமூகத்தாரையும் சென்றடையும் வகையில் இந்த தொடர்பாடல் ஆவணங்கள் சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ளன” என்றார்.

சிறார்களை கவரும் வகையிலமைந்த குறு இசை மற்றும் வீடியோ போன்றன முன்பள்ளி சிறுவர்கள் மத்தியில் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் போதியளவு விழிப்புணர்வை பெற்றுக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும். புகழ்பெற்ற முன்னாள் கிரிக்கெட் நட்சத்திரமும் சமூக செயற்பாட்டாளருமான ரொஷான் மஹாநாம சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பது தொடர்பான பெறுமதி வாய்ந்த வழிகாட்டல்களை வழங்கும் “ரொஷான் மாமாவிடமிருந்து ஒரு பாடம்” எனும் தலைப்பில் வீடியோ தயாரிக்கப்பட்டுள்ளது. வயது வந்தவரினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு ஏற்றுக் கொள்ளத்தகாத நடத்தைக்கும் மறுப்பு தெரிவிக்கும், ஓட்டமெடுத்து, நம்பிக்கைக்குரிய வயது வந்தவரிடம் தெரிவிக்கச் செய்யும் வகையில் மூன்று பிரதான தகவல்கள் அமைந்துள்ளன.

கடந்த சில வருடங்களில் சிறார்களுக்கு எதிரான வன்முறைகள் பெருமளவில் அதிகரித்துள்ளன. போதியளவு விழிப்புணர்வின்மை மற்றும் அறிவின்மை போன்றவற்றினால் பாதிக்கப்படும் முன்பள்ளி சிறுவர்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அத்தியாவசியமானதாகும்.

குறு இசை என்பது சகல முன்பள்ளிகளிலும் தினசரி வழமைச் செயற்பாடாக அமைந்திருக்கும். சிறுவர்களால் மனனம் செய்யப்பட்டு பாடப்படும். முன்பள்ளி ஆசிரியர்கள், ஆரம்ப சிறுவர் பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி அதிகாரிகள் மற்றும் பெற்றோர்கள் என சகல பங்காளர்களையும் உள்ளடக்கி, மாவட்ட மட்டங்களில் பயிற்சி அமர்வுகளும் முன்னெடுக்கப்படும்” என்றார்.

இலங்கை குழந்தை மருத்துவ நிபுணர்கள் கல்வியகத்தின் (SLCP) சிறுவர் பாதுகாப்பு குழுவின் தலைமை அதிகாரி பேராசிரியர் அஸ்வினி டி பெர்னான்டோ கருத்துத் தெரிவிக்கையில், “நாட்டின் சிறுவர்களுக்கு எதிராக பதிவாகும் வன்முறைகளில் அதிகரிப்பு காணப்பட்டுள்ள நிலையில், இலங்கை குழந்தை மருத்துவ நிபுணர்கள் கல்வியகத்தின் (SLCP) சிறுவர் பாதுகாப்பு குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தகவல் அவசியமானதாக அமைந்துள்ளது. தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கு சிறுவர்களுக்கு வலுவூட்டும் நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவது முக்கியமானதாகும்” என்றார்.

# SLT-MOBITEL இன் நவீன புத்தாக்கங்களுக்கு கௌரவிப்பு

SLT-MOBITEL, தேசிய செயற்திட்ட முகாமைத்துவ சிறப்புகள் (NPME) விருதுகள் 2023 இல், நவீன தொழில்நுட்ப முன்னேற்றங்கள், நவீன புத்தாக்கம் மற்றும் மாற்றத்தை முன்னெடுப்பதற்கான ஆற்றல் போன்றவற்றை வெளிப்படுத்தியிருந்தமைக்காக ஐந்து உயர் கௌரவிப்புகளைப் பெற்றுக் கொண்டது. NPME மாநாடு மற்றும் விருதுகள் 2023 நிகழ்வை, இலங்கை செயற்திட்ட முகாமைத்துவ நிறுவகம் (PMI) அண்மையில், கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் முன்னெடுத்திருந்தது.

அமெரிக்காவின் செயற்திட்ட முகாமைத்துவ நிறுவகத்தின் உத்தியோகபூர்வ அமைப்பாக இலங்கை செயற்திட்ட முகாமைத்துவ நிறுவகம் (PMI) திகழ்கின்றது. இலாகா முகாமைத்துவ பணி, செயற்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டம் போன்றவற்றுக்கான உலகின் முன்னணி நிபுணத்துவ அமைப்பாக PMI காணப்படுகின்றது.

Robotics, artificial intelligence, தொலைத்தொடர்பாடல்கள், கல்வி, ஆய்வு, விவசாயம் மற்றும் கால்நிலை அபிவிருத்தி போன்ற துறைகளில் முன்னேற்றங்களை பதிவு செய்திருந்தமை மற்றும் சிறந்த சாதனைகளை பதிவு செய்திருந்தமை போன்றவற்றுக்காக இந்த விருதுகளை நிறுவனம் பெற்றுக் கொண்டது.

SLT-MOBITEL இன், Embryo Innovation Center க்கு, Best Managed Project in Robotics and Artificial Intelligence for the Raccoon AI Solution பிரிவில் வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்த புத்தாக்கமான வியாபார மதிநுட்ப (BI) கட்டமைப்பு மேம்படுத்தப்பட்ட இயந்திர பயிலல்களை பயன்படுத்துவதுடன், தமது தரவுகளிலிருந்து செயலாற்றக்கூடிய பிரித்தெடுக்கக்கூடிய செயற்பாடுகளை வியாபாரங்கள் பெற்றுக் கொள்வதற்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. கட்டமைப்பினால் வடிவமைப்புகள் மற்றும் போக்குகள் இனங்காணப்பட்டு, எதிர்கால போக்குகளுக்கு எதிர்வுகூரல்கள் வழங்கப்படுகின்றன. இதனால், வியாபாரங்களுக்கு செயற்பாடுகளை சீராக்கம் செய்து, தகவல்களுடன் கூடிய தீர்மானங்களை மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும்.



SLT-MOBITEL இன் Omnichannel Experience for Customers and Customer Touch Points திட்டத்துக்காக, Best Managed Project in Telecommunications Sector பிரிவின் வெற்றியாளராகவும் தெரிவு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பிரிவினூடாக, வாடிக்கையாளர் ஈடுபாடு மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், ஒன்றுக்கு மேற்பட்ட தொடர்பாடல் நாளிகைகளினூடாக இணைப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இந்த வாடிக்கையாளர் மையப்படுத்திய செயற்திட்டத்தினூடாக, கட்டமைப்புகளிடையே நிலை மாற்றங்களை இலகுவாக மேற்கொள்ள முடிவதுடன், உரையாடல்களின் தொடர்ச்சித் தன்மை உறுதி செய்யப்பட்டு, தொடர்பாடல் அனுபவம் மேம்படுத்தப்படுகின்றது.

SLT-MOBITEL அரசாங்க வியாபார பிரிவின் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் (NWSDB) தொடர்பாடல் நிலைய தீர்வுக்காக Runner-up award for the best managed project in government sector விருதைப் பெற்றுக் கொண்டது. இந்தத் தீர்வினூடாக, NWSDB வாடிக்கையாளர் ஈடுபாடு மேம்படுத்தப்பட்டதுடன், அதற்காக 24/7தகவல் பகுதி மற்றும் புத்தாக்கமான தொழில்நுட்பங்கள் போன்றன நிறுவப்பட்டிருந்தன.

மேலும், SLT-MOBITEL, The Embryo Innovation Center க்கு மற்றுமொரு கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது. அதன் Fazenda Smart Agro Solution தீர்வுக்காக Runner-up prize for ‘Best Managed Project in Agriculture and Livestock Development Sector விருது வழங்கப்பட்டிருந்தது. இந்த டிஜிட்டல் மயமாக்கத்தினூடாக, விவசாயிகளுக்கு பெருந்தோட்டங்களின் முக்கிய பிரிவுகளை கண்காணிக்க உதவுவதுடன், உர பிரயோகம் தொடர்பில் தீர்மானமெடுத்தல்கள் தொடர்பான பெறுமதியான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

SLT-MOBITEL இன் விருதுகள் வழங்கும் நிகழ்வினூடாக தொடர்ச்சியான அர்ப்பணிப்பு வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது. இலங்கையின் தொழில்நுட்ப கட்டமைப்பில் நிறுவனத்தின் கீர்த்தி நாமத்தை பெற்றுக் கொடுக்கும் வகையில் NPME மாநாடு மற்றும் விருதுகளினூடாக கீர்த்தி நாமத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

# யுத்தக் களமான இஸ்ரேல்

ரஷ்யாவுக்கும் உக்ரேனுக்கும் இடையிலான யுத்தம் 592 நாட்கள் கடந்துள்ள நிலையில், அதில் கூடுதல் கவனத்தை செலுத்திக்கொண்டிருக்கும் உலகத்தின் கவனத்தை, இஸ்ரேல் ஹமாஸ் மோதம் ஒட்டுமொத்தமாக தம்பக்கம் திருப்பிவிட்டது எனலாம்.

2023 ஒக்டோபர் 7ஆம் திகதி சனிக்கிழமை காலைப் பொழுது சகஜமானதாகத் தொடங்கவில்லை. காலை 8 மணி தொடங்கி 2 மணி நேரத்தில் இஸ்ரேல் முழுவதும்





பல பகுதிகளிலும் ஏவுகணைகள் துளைத்தெடுத்துள்ளன. சற்றும் எதிர்பாராத இந்தத் தாக்குதலால் தேசமும், தேச மக்களும் அதிர்ச்சிக்கு உள்ளான சூழலில் ஹமாஸ் குழுவினர் இஸ்ரேலுக்கு நுழைந்துள்ளனர். மோட்டார் சைக்கிள்கள், கார்கள், போராகிளைடர்கள் எனப் பலவாறாக இஸ்ரேலுக்குள் ஹமாஸ் பயங்கரவாதிகள் நுழைந்துள்ளனர்.



## குண்டு மழை பொழிந்தன


காசா பகுதியில் பதிலடி தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தொடங்கியது அத்துடன், பல ஆயிரம் ரிசர்வ் படை வீரர்களையும் இஸ்ரேல் இராணுவம் பணிக்கு அழைத்துள்ளது.

இஸ்ரேல் விமானப்படையின் 12 போர் விமானங்கள் காசா பகுதியில் பறந்து குண்டு மழை பொழிந்துள்ளன. இதனால், காசா பகுதியில் பல கட்டடங்கள் தீப்பற்றி எரிகின்றன. ஹமாஸ் இயக்கத்தின் 17 இராணுவ முகாம்களையும், 4 மண்டல தலைமை அலுவலகங்களையும் குறிவைத்து குண்டுவீசியதாக இஸ்ரேல் இராணுவம் கூறியுள்ளது.



## 300 பேர் படுகொலை

இஸ்ரேல் மீது காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் பயங்கரவாத குழு நடத்திய திடீர் ஏவுகணை தாக்குதலால் இஸ்ரேலில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. ஏவுகணை தாக்குதலில் 300 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளன. 700-க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 779 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.



## கண்டனம்

இஸ்ரேல் மீது ஹமாஸ் பயங்கரவாதிகள் நிகழ்த்திய தாக்குதலை பிரிட்டன், ஜேர்மனி, இத்தாலி போன்ற நாடுகள் கண்டித்துள்ளன. பிரிட்டன் வெளியுறவுச் செயலர் ஜேம்ஸ் க்ளெவர்லி, ஹமாஸின் திடீர் தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என்று கூறியுள்ளார். ஜேர்மனி வெளியுறவு அமைச்சர் அனலெனா பேர்போக், காசாவிலிருந்து இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலைக் கண்டிக்கிறது என்று கூறியுள்ளார்.

மேலும், ஹமாஸ் பயங்கரவாதிகள் உடனடியாக தாக்குதலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும் எச்சரித்துள்ளார்.



## பதற வைக்கும் வீடியோ


நகருக்குள் நுழைந்தது மட்டுமல்லாது, கண்ணில் பட்ட பொதுமக்களையெல்லாம் சுட்டுக் கொல்லும் காட்சிகள் வெளியாகியுள்ளது. சமூக வலைதளத்தில் வெளியாகியுள்ள ஒரு வீடியோவில் ஒரு வெள்ளை நிற காரில் ஹமாஸ் பயங்கரவாதிகள் வருகின்றனர். அவர்கள் வீதியை நோக்கி குறிவைக்கின்றனர்.

அதனை ஒரு வீட்டின் மாடியில் இருந்து ஒருவர் வீடியோ எடுத்துள்ளார்.

## மோடி அதிர்ச்சி: பைடன் ஆதரவு

இஸேரல் மீதான ஹமாஸ் படையின் தாக்குதலுக்கு இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. மேலும் பிரதமர் மோடி இது குறித்து வெளியிட்டுள்ள பதிவில், “இஸேரல் மீதான பயங்கரவாத தாக்குதல் அதிர்ச்சி அளிக்கிறது” என தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இஸேரல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவை, அமெரிக்க அதிபர் பைடன் தொலைபேசி வழியே தொடர்பு கொண்டு பேசினார். அப்போது, இஸேரலுக்கான முழு ஆதரவை உறுதிப்படுத்தினார்.





## ஹமாஸ் கமாண்டர் அழைப்பு

பாலஸ்தீன மக்களுக்கு ஹமாஸ் கமாண்டர் முகமது அல்-தேப் விடுத்துள்ள வேண்டுகோளில், “உங்களிடம் துப்பாக்கி இருந்தால், அதை எடுத்துக் கொண்டு போருக்கு செல்லுங்கள்.

துப்பாக்கிகளை பயன்படுத்த இதுதான் சரியான நேரம். உங்களிடம் உள்ள வாகனங்களை எடுத்துக் கொண்டு போருக்கு செல்லுங்கள். மிக முக்கியமான வரலாறு இன்று தொடங்குகிறது” என கூறியுள்ளார்.

## ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் அவசர கூட்டம்

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலுக்கு தற்போது பிரேசில் தலைமை வகிக்கிறது. இஸ்ரேல் மீதான தாக்குதலை அடுத்து, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுப்போம் என பிரேசில் கூறியுள்ளது.

பிரேசில் வெளியுறவுத்துறை அமைச்சகம் விடுத்துள்ள செய்தியில், “இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பிரேசில் கண்டனம் தெரிவிக்கிறது.

இஸ்ரேல் மக்களுக்கு பிரேசில் துணை நிற்கும். இஸ்ரேல்-பாலஸ்தீனம் இடையேயான பதற்றத்தை முடிவுக்கு கொண்டு வர அனைத்து தரப்பினரும் முயற்சிக்க வேண்டும்” என கூறியுள்ளது.






## மொசாட்டை ஏமாற்றிய ஹமாஸ்

இஸ்ரேல் உளவுத்துறை, உலகின் சிறந்த உளவு அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் மொசாட் ஆகியவற்றையே ஏமாற்றி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது ஹமாஸ் ஆயுதக்குழு.

இஸ்ரேல் மீது இருபதே நிமிடங்களில் 5,000 ரொக்கெட்டுகளை வீசி அந்நாட்டையே அதிரச் செய்துள்ளது ஹமாஸ் அமைப்பு. இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் உட்பட அந்நாட்டின் முக்கிய நகரங்களில் பல இடங்கள் பற்றி எரிகின்றன. ஹமாஸ் தாக்குதலுடன், ஆயுதக் குழுவினரும் இஸ்ரேலுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இஸ்ரேலும் பதிலடி தாக்குதலை தொடங்கியுள்ளதால், 2021ஆம் ஆண்டுக்குப் பிறகு அங்கே மீண்டும் பெரிய அளவிலான போர் தொடங்கியுள்ளது. அமெரிக்க ஆதரவுடன் அதிநவீன இராணுவத்தை கட்டமைத்துள்ள இஸ்ரேலை அவ்வப்போது ஹமாஸ் அமைப்பு நிலைகுலையச் செய்கிறது.

## ஹமாஸ் வரலாறு

பாலத்தீனப் பகுதிகளில் இயங்கி வரும் பல்வேறு ஆயுதக் குழுக்களில் ஹமாஸ் மிகப் பெரியது.

இந்தப் பெயர் இஸ்லாமிய கிளர்ச்சி இயக்கம் என்பதன் அரேபியச் சுருக்கத்தில் இருந்து பெறப்பட்டது. மேற்குக் கரையையும் காசா நிலப் பகுதியையும் ஆக்கிரமிக்கும் இஸ்ரேலிய முயற்சிக்கு எதிரான முதல் பாலத்தீன எழுச்சி தொடங்கிய பிறகு 1987ஆம் ஆண்டில் உருவானது ஹமாஸ். இஸ்ரேலை அழிப்பதே தங்களது நோக்கம் என இதன் சாசனம் கூறுகிறது.



ஹமாஸ் இரு வேறு பணிகளைச் செய்து வருகிறது. ஒன்று இஸ் அட்-டின் அல்-காசம் என்ற தனது இராணுவப் பிரிவின் மூலம் இஸ்ரேலுக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவது. மற்றொன்று நலத்திட்டங்கள் மூலம் சமூகப் பணிகளைச் செய்வது.

ஆனால் 2005ஆம் ஆண்டில் காசா பகுதியில் இருந்து இஸ்ரேலியப் படைகள் விலக்கிக் கொள்ளப்பட்ட பிறகு ஹமாஸ் இயக்கம் அரசியல் நடவடிக்கைகளில் இறங்கியது. 2006ஆம் ஆண்டு நடந்த பாலத்தீன தேர்தலில் ஹமாஸ் இயக்கம் வெற்றி பெற்றது. கூட்டணி அரசிலும் பங்கேற்றது. அதிபர் முகமது அப்பாஸின் ஃபதா இயக்கத்தைப் பகைத்துக் கொண்டதால் அரசில் இருந்து வெளியேற்றப்பட்டு காசாவுக்குள் முடங்கியது.

## நேபாளிகள் 17 பேர் சிக்கினர்

இஸ்ரேலில் பாலஸ்தீன தீவிரவாதிகள் புகுந்து பிணைக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டவர்களில் 17 பேர் நேபாளத்தை சேர்ந்த மாணவர்கள்.

இதில் இஸ்ரேல் பல்கலைக்கழகத்தில் படித்த 7 பேர் காயம் அடைந்துள்ளனர். ஏனைய 10 பேர் இஸ்ரேல் வேளாண் கல்லூரியில் பயின்ற மாணவர்களாவர்.

## உடனடியாக வெளியேறவும்



காசா மக்களை உடனடியாக வெளியேறுமாறு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது டுவிட்டர் (எக்ஸ்) பக்கத்தில் வெளியிட்ட பதிவில், அந்த மோசமான நகரத்தில் இருந்து (காசா முனை) ஹமாஸ் நிலைநிறுத்தப்பட்டு, மறைந்திருந்து செயல்பட்டு வருகிறது. அந்த பகுதிகளை நாங்கள் கட்டிட சிதைவுகளாக மாற்றப்போகிறோம். காசாவில் வாழும் மக்களுக்கு நான் கூறுவது என்னவென்றால் உடனடியாக அங்கிருந்து வெளியேறுங்கள், அனைத்து பகுதியிலும் நாங்கள் முழு பலத்துடன் செயல்பட உள்ளோம்’ என தெரிவித்துள்ளார்.



## இருளில் மூழ்கியது காசா

காசாவுக்கு வழங்கப்படும் குடிநீர், எரிபொருள், அத்தியாவசிய பொருட்கள் இணைப்பை இஸ்ரேல் துண்டித்துள்ளது. மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால் சனிக்கிழமை (07) இரவு முழுவ காசா இருளில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கேரளா

## ஓட்டம் எடுத்தார் மனைவி: கொண்டாடினார் கணவன்

தங்கள் மனைவி பிரிந்து சென்றதால் கணவன் கண்ணீர் விட்டு வருத்தப்படுவதையும் சிலர் மது குடித்து வருத்தத்தை போக்கி கொள்வதையும் பார்த்துள்ளோம்.

ஆனால், 40 வயதான நபர் ஒருவர், தனது மனைவி வேறு ஒருவருடன் சென்றதையடுத்து, தனது நண்பர்களுக்கு பிரியாணி, மது விருந்து என வைத்து, ஆடல் பாடலுடன் கொண்டாடியுள்ள சம்பவம் இந்தியாவின் கேரளா மாநிலத்தில் அரங்கேறியுள்ளது. கேரள மாநிலத்தை சேர்ந்த தம்பதி, திருமணமாகி வாழ்ந்து வந்த நிலையில், மனைவிக்கு, அதே பகுதியை சேர்ந்த மற்றொரு நபருடன் பழக்கம் ஏற்பட்டு



இந்த பழக்கம் நாளடைவில் கள்ளக்காதலாக மாறியுள்ளது.

இதனை அறிந்த கணவன் தனது மனைவியை கண்டித்துள்ளார். இதனால் அடிக்கடி கணவன், மனைவிக்கு இடையே பிரச்சினை ஏற்பட்டு வந்துள்ளது.

சம்பவத்தன்று கணவர் வெளியில் சென்று வீட்டிற்கு வந்த போது, அவரது மனைவி தனது கள்ளக்காதலனுடன் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. தனது மனைவி வேறு ஒருவருடன் சென்றதால் அவர் மன உளைச்சலுக்கும் ஆளாகி உள்ளார். அதில் இருந்து விடுபட்டு வெளியில் வர வேண்டும் என எண்ணிய கணவன், இதனை நாம் ஒருவிழாவாக கொண்டாடுவோம் என எண்ணி, தனது நண்பர்களை வீட்டிற்கு அழைத்துள்ளார்.

அவரது அழைப்பின் பேரில் அவரது வீட்டிற்கு அவரது நண்பர்கள் உட்பட 250 பேர் வந்துள்ளனர். அவர்கள் அனைவருக்கும் மது வாங்கி கொடுத்து, பிரியாணி சமைத்து பரிமாறியுள்ளார். பின்னர் போதை தலைக்கேறிய நிலையில், அனைவரும் ஒன்று சேர்ந்து, ஆடி, பாடி கொண்டாடியுள்ளனர்.

அமெரிக்கா

# சாதனை படைத்த 104 வயது மூதாட்டி

சிக்காகோவை சேர்ந்த 104 வயதுடைய டோரத்தி என்ற மூதாட்டி ஒருவர் 13,500 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து குதித்து சுமார் 7 நிமிடங்கள் பாராசூட்டிலேயே பயணம் செய்து சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்பதாக தனது 100 வயதில் ஸ்கை டைவ் செய்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

முதலில் தனது 100ஆவது வயதில் செய்தபோது பயந்ததாகவும் தற்போது தாமாக குதித்ததாகவும் தெரிவித்துள்ளார். இவர் விடுமுறை நாட்களில் மற்ற நாடுகளுக்கு சென்று சாகசங்களில் ஈடுபட்டு வருகிறார்.

இதற்கு முன், சுவீடனைச் சேர்ந்த 103 வயதான லின்னியா இங்கேகார்ட் லார்சன் என்பவரால் 2022ஆம் ஆண்டு மே மாதம் மிக வயதான ஸ்கைடைவர் என்ற கின்னஸ் உலக சாதனை படைக்கப்பட்டது. இந்த சாதனையை 104 வயதான மூதாட்டி டோரதி முறியடித்துள்ளார்.



## பிரதமர் மோடியை கொல்ல சதி



புதுடெல்லி திகார் சிறையில் இருக்கும் தாதா லாரன்ஸ் பிஷ்னாயை விடுவித்து ரூ.500 கோடி தராவிட்டால் பிரதமர் மோடியை படுகொலை செய்வோம், நரேந்திர மோடி ஸ்டேடியத்தை குண்டு வைத்து தகர்ப்போம் என இ-மெயில் மூலம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளமை குறித்து மும்பை பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளுக்கு தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) எச்சரிக்கை விடுத்துள்ளது.

மத்திய பாதுகாப்பு பிரிவு ஒன்றுக்கு மிரட்டல் இ-மெயில் ஒன்று வந்துள்ளது. அதில், “சிறையில் இருக்கும் தாதா லாரன்ஸ் பிஷ்னாயை விடுவிக்க வேண்டும். ரூ.500 கோடி தர வேண்டும். இல்லையென்றால், பிரதமர் நரேந்திர மோடியை படுகொலை செய்வோம், அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி ஸ்டேடியத்தையும் குண்டுவைத்து தகர்ப்போம்.

இந்தியாவில் அனைத்தும் விற்பனை செய்யப்படுகிறது. நாங்களும் சிலவற்றை வாங்க வேண்டும். நீங்கள் எவ்வளவு பாதுகாப்புடன் இருந்தாலும், நீங்கள் எங்களிடம் இருந்து பாதுகாப்பாக இருக்க முடியாது. நீங்கள் பேச விரும்பினால், நாங்கள் கூறியதை செய்யுங்கள்” என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இ-மெயில்எங்கிருந்து வந்தது என்ற விசாரணை நடைபெற்று வருகிறது.

மத்திய பிரதேசம்

## பன்றி ரத்தம் குடித்தால்தான் திருமணம்



நவீன உலகத்திற்கு ஏற்றார் போல மக்கள் அனைவரும் தங்களின் வாழ்க்கை முறையை மாற்றி வருகின்றனர். ஆனால், இந்தியாவில் வாழ்ந்து வரும் பலவகையான பழங்குடியினர் இன்றளவிலும் தங்களுக்கான பாரம்பரியத்தை கடைபிடித்து வருகின்றனர்.

மத்திய பிரதேசம் மற்றும் சத்தீஸ்கரில் வாழும் கோண்ட் இன பழங்குடியின மக்கள் உலகின் மிகவும் பழைமையான பழங்குடியினராக இன்றும் கருதப்படுகின்றனர். பல ஆண்டாண்டு காலமான அவர்களின் பாரம்பரியத்தை இன்றும் பிசுராமல் தங்களின் முழு மனதோடு பின்பற்றிவருகின்றனர். முக்கியமாக திருமணம் தொடர்பான விதிகள்.

அதாவது பெண்ணை ஆண் காதலித்து திருமணம் செய்துகொள்ள விரும்பும் பட்சத்தில் முதலில் அந்த மணமகன் மாமனாருக்கு சொந்தமான நிலத்தில் இறங்கி வேலைசெய்ய வேண்டுமாம். மணமகன் உண்மையிலேயே கடின உழைப்பாளிதான் என்று தோன்றினால் மட்டுமே அவர்கள் சம்மதம் தெரிவிப்பார்களாம்.

அதே போல் “என் மகளுக்காக பையன் எதை வேண்டுமானாலும் செய்வான்” என்பதை நிரூபிக்க பன்றியின் பச்சை இரத்தத்தை அப்படியே குடிக்க சொல்வார்களாம். இந்த பலப்பரீட்சைகளில் மாமனாரின் மனங்கவர்ந்தால் மட்டுமே சம்மதம் தெரிவிப்பார்களாம்.

ஈரான்

## உலக அமைதிக்கான நோபல் பரிசு அறிவிப்பு

சுவீடன் நாட்டை சேர்ந்த ஆல்பிரட் நோபல் (Alfred Nobel) எனும் வேதியியல் பொறியாளரின் பெயரால் 1901லிருந்து மருத்துவம், பவுதிகம், வேதியியல், இலக்கியம் மற்றும் உலக அமைதி ஆகிய 5 துறைகளில் மனித குலத்திற்கு பயனுள்ள சாதனைகளை புரிந்தவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நோபல் பரிசு எனும் உலக புகழ்பெற்ற விருது வழங்கப்படுகிறது.

அந்த வகையில் 2023ஆம் ஆண்டிற்கான உலக அமைதிக்கான



நோபல் பரிசுக்கு ஈரானிய பெண்கள் உரிமை பிரசாரகரும், மனித உரிமை போராளியுமான 51 வயதான நர்கெஸ் சஃபி மொகமதி (Narges Safie Mohammadi) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பௌதிக பட்டதாரியான மொகமதி, ஈரானில் பெண்கள் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும், மனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை மேம்படுத்துவதற்காக முன்னெடுத்த போராட்டங்களுக்காகவும் கௌரவிக்கப்படுகிறார் என நோபல் பரிசு குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

மேலும் 5 முறை குற்றவாளி என தீர்ப்பளிக்கப்பட்டு 13 முறை ஈரான் அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு 154 முறை கசையடிகளும் வாங்கியுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான்

## சட்ட விரோதமான குடியேற்றவாசிகள் வெளியேற்றம்

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை கைப்பற்றியபோது, ஏராளமானோர் அண்டை நாடுகளுக்கு அகதிகளாக குடியேறினர். அந்தவகையில், பாகிஸ்தானில் மட்டும் ஆப்கானிஸ்தானை சேர்ந்த 17 இலட்சம் அகதிகள் வசிப்பதாக கூறப்படுகிறது. இதனால் புலம் பெயர்ந்தோர் பிரச்சினை குறித்து ஆப்கானிஸ்தானுடன் பாகிஸ்தான்



அரசாங்கம் நீண்ட காலமாக விவாதித்தும் எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இந்தநிலையில், சட்ட விரோதமாக பாகிஸ்தானில் குடியேறியுள்ள அனைவரும் எதிர்வரும் 31ஆம் திகதிக்குள் வெளியேற வேண்டும். இல்லையெனில் நவம்பர் 1ஆம் திகதி முதல் கட்டாயமாக வெளியேற்றப்படுவார்கள் என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானின் இந்த முடிவுக்கு ஆப்கானிஸ்தானின் தலிபான் அரசாங்கம் கடும் அதிருப்தியை தெரிவித்துள்ளது.




அக்கரைப்பற்று யங் பிளவர்ஸ் தொடர்:

## அரையிறுதியில் சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ்

**அஸ்ஹர் இப்றாஹீம்**

அக்கரைப்பற்று யங் பிளவர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 20 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தை வென்றே அரையிறுதிப் போட்டிக்கு பிளையிங் ஹோர்ஸ் தகுதி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 137 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 138 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளையிங் ஹோர்ஸ் 18.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக பிளையிங் ஹோர்ஸின் எஸ்.எம்.எம்.றம்ஸீன் தெரிவானார்.



உலகக் கிண்ணம்:

# இலங்கையை வென்ற தென்னாபிரிக்கா

இந்தியாவில் நடைபெற்று வரும் சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடரில், டெல்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை உடனான போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இலங்கை

தென்னாபிரிக்கா: 428/5 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: றஸி வான் டர் டுஸன் 108 (110), ஏய்டன் மார்க்ரம் 106 (54), குயின்டன் டி கொக் 100 (84), டேவிட் மில்லர் ஆ.இ 39 (21), ஹென்றிச் கிளாசென் 32 (20) ஓட்டங்கள்)

இலங்கை: 326/10 (44.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: சரித் அஸலங்க 79 (65), குசல் மெண்டிஸ் 76 (42), தசுன் ஷானக 68 (62), கசுன் ராஜித 33 (31) ஓட்டங்கள்)

போட்டியின் நாயகன்: ஏய்டன் மார்க்ரம்



தேசிய மட்ட பளுதூக்கலில்

## யாழ். தெல்லிப்பளை மகாஜனாவுக்கு 2 வெள்ளிப் பதக்கங்கள்

**அஸ்ஹர் இப்றாஹீம்**

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட பளுதூக்கல் போட்டியில் யாழ்ப்பாணம்-தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி மாணவனான ஜெ.ஜெனுசின் 17 வயது ஆண்கள் பிரிவில் 96 கிலோ கிராம் எடைப் பிரிவில் ஒட்டுமொத்தமாக 146 கிலோ கிராம் எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கமும், மாணவி ஐதுஷா 20 வயதுப் பெண்கள் பிரிவில் 81 கிலோ கிராம் எடைப் பிரிவில் ஒட்டுமொத்தமாக 98 கிலோ கிராம் எடையைத் தூக்கி வெள்ளிப் பதக்கமும் பெற்றுள்ளனர்.

## யாழில் வாஸ்

**பு. கஜிந்தன்**

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் பிரபல பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் தலைமையிலான குழுவினரால் யாழ்ப்பாணத்தில் உள்ள திறமையான துடுப்பாட்ட வீரர்களை தெரிவு செய்யும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. ஜப்னா ஸ்ரான்லியன்ஸ் (Jaffna stallions) நிறுவனத்துடன் இணைந்து இந்த வேலைத்திட்டமானது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு தெரிவு செய்யப்படும் வீரர்கள் தேசிய கிரிக்கெட் அணிக்குள் உள்வாங்க சந்தர்ப்பம் உள்ளது என்பதுடன், வீர, வீராங்கனைகளை வெளிநாட்டுக் கழகங்கள், தொடர்கள் என்பவற்றில் பங்கேற்க முடிந்த வரையில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்

**நூருல் ஹுதா உமர்**

ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் “மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்” எனும் நோக்குடன் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல்.முக்தாரால் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பாக மருதமுனை மிமா விளையாட்டுக் கழகத்துடனான கலந்துரையாடல் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்று பணிப்பாளர் அல் ஹாஜ் கலீல் முஸ்தபாவுடன் மருதமுனை ஆத்தியடி தோப்பில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது மருதமுனை மிமா விளையாட்டு கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையா டப்பட்டதுடன், மிமா விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 09 ஒக்டோபர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.